MALAE THEEPORI

# மாலை தீப்பொறி

2022 மே 16-31 தொகுதி 20 இதழ் 20

விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.150

## புல்டோசர் ஆட்சிக்கு எதிராக!




## திமுக ஆட்சியின் ஓராண்டு?!

## அறுவரும் விடுதலை செய்யப்பட வேண்டும்!

# பாபர் மசூதி இடிப்பை கியான்வாபியில் மீண்டும் அரங்கேற்ற சங்பரிவாரை அனுமதியோம்!

*கியான்வாபி மசூதியில் சர்ச்சையைக் கிளப்புவதன் மூலம் பாபர் மசூதி இடிப்பு சம்பவத்தை மீண்டும் அரங்கேற்ற சங் பரிவார் திட்டமிடுகிறது. இது 1947 ஆகஸ்ட் 15ஆம் தேதி நிலவரப்படி ஒவ்வொரு மத வழிபாட்டுத் தலத்தின் நிலையை உறுதி செய்யும் வழிபாட்டுத் தலங்கள் சட்டம், 1991க்கு எதிரான அப்பட்டமான சட்டவிதி மீறலாகும்.*

*பாபர் மசூதி இடிப்பை அருவருப்பான குற்றவியல் நடவடிக்கை என கருதினாலும், ராமர் கோயில் உரிமை தொடர்பான கோரிக்கைக்கு சாதகமாக தீர்ப்பளிப்பதன் மூலம் இதுபோன்ற மற்ற சர்ச்சைக்குரிய கோரிக்கைகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்க முடியும் என்ற உச்ச நீதிமன்றத்தின் உணர்வுக்கு இது முற்றிலும் எதிரானதாகும்.*

*ஆனால் சங் பரிவார் அமைப்புகள் தொடர்ச்சியாக 'அயோத்தி சிர்ஃப் ஏக் ஜாங்கி ஹை, காசி மதுரா பாகி ஹை' (அயோத்தி என்பது காசி மற்றும் மதுராவில் என்ன நடக்கும் என்பதற்கான ஒரு ஒத்திகை மட்டுமே) என்ற ஆக்ரோஷமான முழக்கத்தை மீண்டும் மீண்டும் எழுப்பி தயாராகி வருகிறது. உச்ச நீதிமன்றம் தலையிட்டு இந்தச் சதியை முறியடிக்க வேண்டும். கியான்வாபியை நோக்கிய பிஜேபியின் நகர்வுகளுக்கு எதிராக அமைதியை விரும்பும் இந்தியர்கள் அனைவரும் உறுதியுடன் ஒன்றுபட வேண்டும்.*

அத்தியாவசியப் பொருட்களின் விலை விண்ணை முட்டும் அளவு உயர்ந்து வருகின்றது, பொருளாதாரம் ஒரு அபாயகரமான சிக்கலில் உள்ளது. மேலும் பெரும்பான்மையான இந்தியர்கள் தங்கள் வேலை, வாழ்வாதாரம், வீடு மற்றும் வாழ்க்கையின் பிற அடிப்படைத் தேவைகளைப் பற்றி கவலைப்படுகிறார்கள். மோடி அரசு இந்த நெருக்கடிகளுக்கு எந்தத் தீர்வையும் காணவில்லை, மக்களுக்கு நிவாரணம் எதுவும் வழங்கவில்லை. ஆனால், அது எல்லா நெருக்கடியிலும் புதிய வாய்ப்புகளை தேடவும் மக்களின் வலிகளை மேலும் மேலும் அதிகரிக்க மட்டுமே செய்கிறது.

இந்தியா பன்முகத்தன்மை, நல்லிணக்கம் ஆகிய இரு தூண்களின் மேல் நின்றுதான் எத்தகைய கடும் சூழலையும் எதிர்கொள்ள முடியும். எனவே இந்த அஸ்திவாரங்கள் மீதான தாக்குதல் வெறும் இஸ்லாமிய சமூகத்தின் மத உரிமை மற்றும் பாரம்பரியத்தின் மீதான தாக்குதல் மட்டுமல்ல, இந்தியாவின் தொடர்ந்து வரும் வரலாற்று மரபு மற்றும் அதன் ஆன்மாவின் மீதான நேரடியான தாக்குதலாகும்.

**திபங்கர்**
**பொதுச் செயலாளர்**
**இகக(மாலெ) விடுதலை**

## அடிப்படை வசதி கேட்டு ஆட்சியரிடம் மனு

*திருவள்ளூர் மாவட்டம் எல்லாபுரம் ஒன்றியம் தாமரை குப்பம் தாராட்சி கூனிப்பாளையம் மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டி தரவும் கழிவறை கட்டி தரவும் வேண்டும் என திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரிடம் இகக(மாலெ) மாவட்டச் செயலாளர் தோழர் திருநாவுக்கரசு மற்றும் தோழர்கள் அன்பு, சுந்தரம், செபாஸ்டின் துரை தலைமையில் மனு கொடுக்கப்பட்டது.*



2022 மே 16-31

மாலெ தீப்பொறி

தொகுதி 20 இதழ் 20

இருவார இதழ்

**உள்ளே**

திமுக ஆட்சியின் ஓராண்டு 4
ஒரு காவல்துறை அரசு 7
மக்கள் மீதான தாக்குதல்கள் - கள ஆய்வு 9
ஊழியர் பயிற்சி முகாம் 11

**ஆசிரியர்**
**ஜி.ரமேஷ்**

**ஆசிரியர்குழு**
**பாலசுந்தரம்**
**என்.கே.நடராஜன்**
**கே.ஜி.தேசிகன்**

**மேலாளர்**
**சொ.இரணியப்பன்**

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்) தமிழ்நாடு மாநிலக்கமிட்டியின் அரசியல் ஏடு**

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம்,
சென்னை – 600023

**நிர்வாக அலுவலகம்**

**3/254பி, ஜீவா தெரு,**
**வண்டலூர்**
**சென்னை – 600048**

**தொலைபேசி : 94435 07067**
**98403 40741**

malaetheepori@gmail.com
cpimlthamilnadu.blogspot.com

தலையங்கம்

# அறுவரும் உடன் விடுதலை செய்யப்பட வேண்டும்

இந்திய உச்ச நீதிமன்றம் மிகச் சரியாக உச்சியில் அடி கொடுத்திருக்கிறது. அறியாத வயதில் பேட்டரி வாங்கிக் கொடுத்த ஒரே செயலுக்காக, எதற்காக தான் வாங்கிக் கொடுத்தோம் என்று கூட தெரியாமல் 15 வயதில் கைது செய்யப்பட்டு சிறைக்குள் அடைக்கப்பட்டு தூக்குத் தண்டனை பெற்று பின்னர் அது ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டு, 31 ஆண்டுகள் சிறைவாசத்திற்குப் பின்னர், பல கட்ட சட்டப் போராட்டங்கள், மக்கள் போராட்டங்கள், அற்புதம்மாள் அவர்களின் விடாத தொடர் முயற்சி ஆகியவற்றால் இப்போது உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார் பேரறிவாளன். உச்ச நீதிமன்றம் தற்போது வழங்கியுள்ள தீர்ப்பு நிச்சயமாக வரலாற்றில் ஒரு மைல் கல். ஆட்சிகள் மாறினாலும் காட்சிகள் மாறாது என்பது போல், காங்கிரஸ் ஆட்சி போய் பாஜக ஆட்சி வந்தபின்னரும், தமிழ்நாடு சட்டமன்றத்தில் எழுவரையும் விடுதலை செய்ய வேண்டும் என்று திரும்பத் திரும்ப தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அதை நடைமுறைப்படுத்த தமிழ்நாட்டில் இருந்த ஆளுநர்களால் குடியரசுத் தலைவருக்கு அனுப்பப்படாமல் ஆண்டுக் கணக்கில் கிடப்பில் போடப்பட்டு இழுத்தடிக்கப்பட்டது. இது சரியல்ல என்று இந்திய உச்சநீதிமன்றம் சொன்னதற்குப் பின்னரும்கூட மோடியின் ஒன்றிய அரசு, பேரறிவாளனை விடுதலை செய்ய குடியரசுத் தலைவருக்கு மட்டுமே அதிகாரம் உள்ளது என்று பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்தது. இப்போது உச்சநீதிமன்றம் தனக்கான அதிகாரத்தை தெளிவாகவே எடுத்துக் காட்டியிருக்கிறது. அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 142ன் கீழ் விடுதலை செய்வதற்கான அதிகாரம் தனக்குள்ளது என்பதைச் சுட்டிக் காட்டி பேரறிவாளனை விடுதலை செய்திருக்கிறது. பாசிச பாஜக-ஆர்எஸ்எஸ் அரசு இந்தியாவில் உள்ள அனைத்து நீதிமன்றம் முதல் ரிசர்வ் வங்கி வரை அனைத்து அரசுத் துறை அமைப்புகளையும் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து தன் கட்டளைக்குக் கீழ்படிபவைகளாக மாற்றிக் கொண்டிருக்கும் இவ்வேளையில், உச்சநீதிமன்றம் தனக்குள்ள அதிகாரத்தை சரியான நேரத்தில் வெளிப்படுத்தியிருக்கிறது. இது நீதிமன்றத்தின் மேல் அரசியலமைப்புச் சட்டத்தின் மேல் மக்களுக்கு மேலும் நம்பிக்கையை ஏற்படுத்துவதாக இருக்கும். அதேவேளை, கார்ப்பரேட் பெரு முதலாளிகளுக்கு ஆதரவாக பாசிச ஒன்றிய அரசும் பல்வேறு மாநில அரசுகளும் கொள்கைகளை, திட்டங்களை அமல்படுத்தி உழைக்கும் மக்களை, அடித்தட்டு மக்களை வாழ்வாதாரம் இன்றி நிர்கதியாக நிற்கச் செய்து கொண்டிருப்பதற்கு எதிராகவும் மனித உரிமைகள் மீறப்பட்டு சிறுபான்மை மக்கள் சித்தரவதைக்குள்ளாக்கப்படுவதற்கு எதிராகவும் உச்சநீதிமன்றம் உடன் தலையீடு செய்ய வேண்டியது காலத்தின் கட்டாயம். பேரறிவாளனைத் தொடர்ந்து மற்ற 6 பேர்களும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும். மீண்டும் ஒரு சட்டப் போராட்டம் தவிர்க்கப்பட வேண்டும். அது மட்டுமின்றி, பல ஆண்டுகளாக விசாரணையேகூட இல்லாமல் சிறையில் வாடும் இஸ்லாமியயர், தலித், பழங்குடியினரும் விடுதலை செய்யப்பட வேண்டும். ❑

# திமுக ஆட்சியின் ஓராண்டு?!

**பாலசுந்தரம்**

திமுக ஆட்சி பொறுப்பேற்று ஓராண்டாகி விட்டது. "நூறாண்டு நிலைக்கும் ஓராண்டுச் சாதனை", "திராவிட மாடல் ஆட்சி, திசையெட்டும் மகிழ்ச்சி"! இது போன்றும் இன்னும் பல கவர்ச்சி முழக்கங்களும் கொண்டாட்டமும் தமிழ்நாட்டை திக்குமுக்காடச் செய்கின்றன!

ஒன்றிய ஆட்சி அதிகாரத்தில் பாசிச மோடி ஆட்சி, மாநிலத்தில் 10 ஆண்டுகால அலங்கோல அதிமுக ஆட்சி, இந்த இரண்டு ஆட்சிகளையும் எதிர்த்த அதிமுக எதிர்ப்பு -மதவெறி பாஜக-கார்ப்பரேட் எதிர்ப்பு மக்கள் போராட்டங்கள், கொடூரமான கொரோனா முடக்கம் எனும் பின்னணியில், ஓராண்டுக்குமுன் ஒரு மாற்று ஆட்சியை எதிர்பார்த்து மக்கள், திமுகவுக்கு வாக்களித்திருந்தனர். திமுக தேர்தல் அறிக்கை யில் உறுதியளிக்கப்பட்டிருந்த 505 வாக்குறுதிகள், மேற்கூறிய பின்புலத்தை திமுகவும் நன்கு உணர்ந்திருந்ததைக் காட்டின.

ஓராண்டு முடிந்து, "திராவிட மாடல் வளர்ச்சி, திசையெட்டும் மகிழ்ச்சி"! என திமுக மார்தட்டிக் கொள்வது பொருத்தமானதுதானா? திராவிட மாடல் வளர்ச்சி என்ற சொல்லாடல், திமுகவின் தேர்தல் அறிக்கையிலோ தேர்தல் பரப்புரையிலோ எவரும் பயன்படுத்தாத சொல்லாடல். திரு.கலையரசன், திரு. விஜய பாஸ்கர் எழுதி, தேர்தல் முடிந்து வெளிவந்த புத்தகத்தின் தலைப்புதான் இந்த சொல்லாடல். முதலமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்ட மு.க. ஸ்டாலின், தன்னை ஒரு " திராவிட இருப்பு" என்று அறிமுகப்படுத்திக் கொண்டதைத் தொடர்ந்து தனது அரசு திராவிட மாடல் அரசு என்று கூறிக்கொள்ள முற்பட்டார். "சுயமரி-யாதை, சமூகநீதி, சமத்துவம், சகோதரத்துவம், மதச்சார்பின்மை, கூட்டாட்சி தத்துவம், அதிக அதிகாரங்களைக் கொண்ட மாநிலங்கள், அனைத்து தேசிய இனங்களுக்கும் சம உரிமை ஆகியவை திராவிட மாடல் அரசின் உள்ளடக்கம்" என்று முதலமைச்சர் ஸ்டாலின் கூறுகிறார்.

நல்லது. கடந்த எட்டாண்டு கால மோடி ஆட்சியில் மேலே சொன்ன அனைத்து மதிப்பீடு களும் நொறுக்கப்பட்டு "ஒரே நாடு, ஒரே மதம், ஒரே மொழி, ஒரே கலாச்சாரம், ஒரே கட்சி, ஒரே ஆட்சி" என்ற இந்து ராஜ்யக் கொள்கை ஆட்சி பீடத்திலிருக்கும் போது, ஸ்டாலின் கூறும் திராவிட மாடல் அரசின் உள்ளடக்கமாக கூறப்படுகிறவை கவனத்துக் குரியவைதான். இவற்றை, மோடி மாடல் பாசிச ஆட்சிக்கு எதிரான மாடலாக நிறுத்த முற்படுவதும் தமிழ்நாட்டின் வரலாற்றுப் பின்னணியி லிருந்து பார்க்கும் போது வரவேற்புக்குரியதுதான்.

திராவிட மாடலுக்கு ஸ்டாலின் கூறும் "உள்ளடக்கம்" நல்ல பிரகடனங்கள்தான். ஆனால், இவற்றை செயல்படுத்திக் காட்டுவது தான் உண்மையான சவால்.

கடந்த ஓராண்டில், திமுக ஆட்சி, சில திட்டங்களை அறிவித்து செயல்படுத்தியிருப்பது கவனத்திற்குரியது. சில வரவேற்புக்குரியவை. பெண்கள், மாற்றுத்திறனாளிகள், மூன்றாம் பாலினத்தவருக்கு அரசு நகரப் (சாதாரண) பேருந்துகளில் இலவசப் பயணம், அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக்கியது, தமிழில் அர்ச்சனை, தாழ்த்தப்பட்டோர்-பழங்குடியின ருக்கான மாநில ஆணையம் போன்றவற்றை இந்த வகையில் குறிப்பிடலாம். ஆனால், ஆட்சியாளர்கள் "திசையெட்டும் மகிழ்ச்சி" பொங்குவதாக கொண்டாடுவதைக் கூர்ந்து பார்த்தால் பல கேள்விகளே மிஞ்சுகின்றன.

தமிழ்நாட்டை இந்தியாவின் முதல் மாநிலமாக உயர்த்துவது திமுக அரசின் முதன்மையான இலக்கு. தமிழ்நாட்டை ஒரு ட்ரில்லியன் பொருளாதாரமாக உயர்த்துவதுதான் இதற்கான அடித்தளம் என்று முதலமைச்சர் பலமுறை வலியுறுத்திக் கூறியிருக்கிறார். வெளிநாட்டு முதலீட்டை ஈர்ப்பது, தமிழ்நாட்டை "முதலீட்டின் முதல் முகவரி"யாக மாற்றுவது ஆகியவை அரசின் செயல்திட்டமாக இருக்கிறது. உழைப்பும் உழைப்பாளரும் இல்லாமல், ஒரு ட்ரில்லியன் பொருளாதாரம் சாத்தியமா? மூலதனமும் முதலாளிகள் மட்டுமே ஒரு

ட்ரில்லியன் பொருளாதாரத்தைக் கொண்டு வந்துவிட முடியுமா? எந்த முதலீட்டாளரும் மலிவான உழைப்புச்செலவும் உச்சபட்ச லாபமும் இல்லாமல் தொழில் தொடங்க வருவார்களா? அப்படி ஒரு நிலமையை ஏற்படுத்தித் தருவதுதான் "முதலீட்டார்களின் முதல் முகவரி" என்ற திமுக அரசின் பிரகடனம்.

இத்தகைய நோக்கத்துடன்தான் மோடி 4 சட்டத்தொகுப்புகளை கொண்டு வந்திருக்கிறார். உள்நாட்டு, வெளிநாட்டு கார்ப்பரேட் சாம் ராஜ்யத்தில் தொழிலாளர் வர்க்கத்தைக் கொத்தடிமையாக்கி விடும் திட்டம் கொண்டது. அதனால்தான், இந்திய தொழிலாளர் வர்க்கம், இந்த சட்டத் தொகுப்புகளை மோடி ஆட்சி திரும்பப் பெற வலியுறுத்தி, விவசாயிகள் உள்ளிட்ட பிற உழைக்கும் வர்க்கத் துணையோடு அகில இந்திய வேலைநிறுத்தத்தை வெற்றி கரமாக நடத்திக் காட்டியது. போக்கு வரத்து தொழிலாளர் உள்ளிட்ட தமிழ்நாட்டு தொழி லாளர் வர்க்கம் இந்த வேலை நிறுத்தத்தை வெற்றி பெற வைத்தது.

தொழிலாளர் வர்க்கத்தின் நீண்ட நெடிய போராட்டங்கள் டாக்டர் அம்பேத்கரின் கடின முயற்சிகளின் விளைவாக, கொண்டுவரப்பட்ட தொழிலாளர் ஆதரவு சட்டங்களை ஒழித்துக் கட்ட மோடி-ஷா ஆட்சி கொண்டு வந்துள்ளதே மேலே சொன்ன 4 சட்டத் தொகுப்புகள். நியாயமாகப் பார்த்தால், வேளாண் சட்டங்க ளுக்கு எதிராக, குடியுரிமை திருத்தச் சட்டத்துக்கு எதிராக திமுக அரசு சட்டப்பேரவை தீர்மானம் நிறைவேற்றியதைப் போல, தொழிலாளர் சட்டத்தொகுப்புக்கு எதிராகவும் தீர்மானம் நிறைவேற்றியிருக்க வேண்டும். திமுகவின் தலைமையில் இயங்கும் தொமுசவை இந்த சட்டத்தொகுப்புகளுக்கு எதிராக போராட களமிறக்கியிருக்க வேண்டும்.

மேலும், தொழிலாளரது உரிமைகளைப் பறிப்பதைப் போலவே, இந்த சட்டத்தொகுப்பு மாநில அதிகாரத்தையும் பறிக்கிறது. கல்வி மீண்டும் மாநிலப்பட்டியலுக்கு கொண்டுவரப்பட வேண்டுமென்று துணைவேந்தர் மாநாட்டில் முதலமைச்சர் மிகச் சரியாகவே குறிப்பிட்டதைப் போல, தொழிலாளர் சட்டங்களும் மாநிலப் பட்டியலில் இருக்க வேண்டுமென்று கூறி ஒன்றிய அரசின் நடவடிக்கைக்கு எதிராக நடவடிக்கையில் இறங்கியிருக்க வேண்டும். "மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி", "அதிக அதிகாரங்கள் கொண்ட மாநிலங்கள்" என்ற கொள்கையுடைய 'திராவிட மாடல் அரசு' மோடி அரசின் இந்த நடவடிக்கைக்கு எதிராக, வெளிப்படையாக எதிர்ப்பு தெரிவிக்க வேண்டு மென்றே தொழிலாளர் வர்க்கம் எதிர்பார்க்கிறது. அந்த அடிப்படையில்தான் ஏஅய்சிசிடியூ, மோடி அரசின் 4 சட்டத் தொகுப்புகளுக்கு எதிராக சட்டப்பேரவை தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென்ற கோரிக்கையை எழுப்பியது. அந்த சட்டத் தொகுப்புகளுக்கான விதிமுறைகள் உருவாக்குவதை நிறுத்தி வைக்க வேண்டு மென்றும் கோரியது. ஆனால், திமுக அரசு, மோடி அரசின் 4 தொழிலாளர் சட்டத்தொகுப்பை ஏற்று, விதிகளை உருவாக்கியுள்ளது. இவ்வாறு, திமுக அரசு தொழிலாளர் உரிமைகளையும் கைவிட் டுள்ளது; மாநில சுயாட்சி கொள்கையையும் தவற விட்டுள்ளது. வேறு வார்த்தைகளில் சொல்வ தானால் ஒன்றிய மோடி அரசின் ஒற்றை அதிகாரத்தை ஏற்றுக் கொண்டுவிட்டது! திராவிட மாடல் அரசின் உள்ளடக்கம் இதுவல்ல என்பது சொல்லாமலே எவருக்கும் விளங்கும்.

அரசு ஊழியர்களின் கோரிக்கையான பழைய ஓய்வூதிய திட்டத்தைக் கொண்டுவருவோமென்று திமுக தேர்தல் வாக்குறுதி அளித்தது. ஓய்வூதியத் திட்டத்தின் கீழ்வரும் ஊழியர்கள் மிகுந்த எதிர்பார்ப்பில் இருந்தனர். ஆனால், நிதி நிலமையைக் காரணம் காட்டி பழைய ஓய்வூதிய திட்டத்தை செயல்படுத்த முடியா தென்று சட்டப்பேரவையிலேயே நிதியமைச்சர் அறிவித்து விட்டார். "எல்லார்க்கும் எல்லாமும்" என்பதே திராவிட மாடல் அரசின் கொள்கை என்று அறிவித்துள்ள ஆட்சி, மிக முக்கியமான இந்த பழைய ஓய்வூதியக் கோரிக்கையை இல்லை என்று சொல்லிவிட்டது! பழைய ஓய்வூதிய திட்டத்தை ஒழித்துக் கட்ட வேண்டுமென்பது நவதாராளவாத சீர்திருத்தங்களுள் ஒன்று என்பது அனைவருக்கும் தெரிந்த செய்திதான்.

மொத்தத்தில் முற்போக்கான சமூகக் கொள் கைகளை பேசுகிற திமுக அரசு, பிற்போக்கான கார்ப்பரேட் கொள்கைகளை ஏற்றுக் கொண்டு விட்டதாகவே தெரிகிறது. இது மிகப்பெரிய முரண்பாடு. பிற்போக்கு கார்ப்பரேட்- நிலப்பிரபுத்துவ கொள்கைகளை மூடிநிற்கிற முற்போக்கான சமூகக் கொள்கை எதுவும் நீடித்து நிற்பதில்லை.

அனைத்து சாதியினரும் அரச்சகராவதை

திமுக அரசு, ஆட்சியின் துவக்கத்திலேயே செயல் படுத்திக் காட்டியது. இது ஒரு முற்போக்கான சாதனை. ஆனால், ஓராண்டு முடிவில் ஆதினங் களுக்கு அடங்கிப் போய் விட்டது. இதைத்தான் "நூறாண்டு நிலைக்கும் ஓராண்டு சாதனை"யாக சொல்லிக் கொள்வார்களோ? தருமபுரம் ஆதினம் விஷயத்தில் பின்வாங்கிய திமுக அரசை, திருவாரூர் தெருவுக்கு கருணாநிதி பெயர் வைக்கக் கூடாது என்று கூட்டத்தைக்கூட்டி இன்னொரு முறை அரசை பின்வாங்க வைத்திருக் கிறார் அண்ணாமலை! ஆம்பூர் பிரியாணி திருவிழாவில் மாட்டுக்கறி சாப்பிடக் கூடாது என்று சங்கிகள் சத்தம் போட்டவுடன் திருவிழா வையே தள்ளிப் போட்டுவிட்டது திராவிட மாடல் அரசு. உழைப்பவர்களுக்கு நிலம் வழங்கும் நிலச் சீர்திருத்தம், குத்தகை சீர்திருத்தம், உழைப்பாளர்களுக்கு வாழ்வாதாரம் பற்றி பேசாத,"வேளாண் தனி நிதிநிலை அறிக்கையை வரலாற்றுச் சாதனையாகப் பேசிக் கொள்கிறது திமுக அரசு. ஆனால், சேகர் பாபு தலைமையில் ரூ.2566 கோடி மதிப்புள்ள் கோவில் நிலங்களை மீட்டு விட்டதையும் ஓராண்டு சாதனையாகப் பேசுகிறார்கள். கோவில், மடம் நிலங்களை மீட்டு ஆதீனங்களின் கோரிக்கையை ஏற்று பின்வாங்கியுள்ள திமுக அரசை ஆன்மீக அரசு என்று ஆதீனங்கள் கொண்டாடுவதையும் சாதனையாகக் காட்டுகிறது.

'ஜெய்பீம்' திரைப்படம் தூங்காத இரவை ஏற்படுத்திவிட்டதாகவும் மிசா காலத்து சித்தரவதைகளை நினைவுபடுத்திவிட்டதாகவும் கசிந்துருகிய முதலமைச்சர் ஸ்டாலின், விக்னேஷின் காவல் கொலை, திருவண்ணா மலையில் மற்றொரு காவல் கொலை பற்றி சட்டப் பேரவையில் கூறிய பதில்கள், சாத்தான் குளம் காவல் கொலைகள் பற்றி எடப்பாடி பேசியதை நினைவுபடுத்துவதாகவே இருக்கிற மானுட உரிமை ஆதரவு சக்திகளின் அழுத்தம் காரணமாகவே விக்னேஷ் காவல் கொலையில் காவல்துறையினர் சிலரை கைது செய்ய வேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டது. பெண்களுக்கு எதிரான குற்றங்கள் திமுக ஆட்சியில் குறைந்துள்ளதாக புள்ளி விவரங்களை அடுக்கினார் முதலமைச்சர். எத்தனை குற்ற வாளிகள் தண்டிக்கப்பட்டனர் என்ற விவரங்களை சொல்லவில்லை அந்த அறிக்கை. அதிமுக ஆட்சியில் நடைபெற்ற பொள்ளாச்சி குற்றங்கள் தொடங்கி, திமுக ஆட்சிக்கு வந்தவுடனேயே வெளிச்சத்துக்கு வந்த எஸ்பிஏஓ பள்ளி, சிவசங்கர் பாபா பள்ளி குற்றங்களின் குற்றவாளிகள் வரை எவரும் தண்டிக்கப்படவில்லை என்பதையும் மக்கள் மறந்து விடவில்லை.

சிறப்பு வேளாண்மண்டல உயர்நிலைக் கூட்டத்தில் பேசிய முதலமைச்சர், இந்த சட்டம் அதிமுக ஆட்சிகாலத்தில் கொண்டுவரப் பட்டிருந்தாலும் அதை செயல்படுத்துவோம் என்றுகூறி தனது அரசுக்குள்ள "ஜனநாயக அக்கறையை" காட்டிக் கொண்டார். அதே அதிமுக ஆட்சிகாலத்தில் நிறுத்திவைக்கப்பட்ட 8 வழிச்சாலைத் திட்டத்தை வேறுபெயரில் செயல்படுத்தக் கூடாது என்ற விவசாயிகளின் ஜனநாயக குரலுக்கும் செவிசாய்க்க வேண்டு மென்றே விவசாயிகள் விரும்புகின்றனர்.

திராவிட மாடல் அரசுக்கான இலக்கணத்தை வரையறுத்துக்கூறிய முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின், மக்கள் விரோத கார்ப்பரேட் பாதையிலிருந்து திரும்பி வருவாரா? ஆதினங்கள், அண்ணாமலைகளின் அழுத்தங்களை நேருக்கு நேர் எதிர்கொண்டு முறியடிப்பாரா? மேலும் இறங்கிப் போவாரா? வரும் நாட்கள் திமுக அரசுக்கு ஒரு சோதனைக் காலம், ஸ்டாலினை சோதிக்கும் காலம்.

எது எப்படியாயினும் கார்ப்பரேட் எதிர்ப்பு-ஒன்றிய மோடி எதிர்ப்பு போராட்ட மரபு கொண்ட தமிழக மக்கள், சாதி ஒழிப்பு, பெண் விடுதலை போராட்ட மரபு கொண்ட முற்போக்கு, ஜனநாயக சக்திகள், இடது இயக்கங்கள், திமுக அரசை அதன் செயல்பாட்டின் அடிப்படையில் எடை போடுவார்கள். எதிர்க்க வேண்டியதை எதிர்ப்பார்கள். ஆதரிக்க வேண்டியதை ஆதரிக்கத் தயங்கமாட்டார்கள். ❑


மாலெ தீப்பொறி

சந்தாதாரர் ஆகிடுவீர்!

மாதம்
இருமுறை

தனி இதழ் ரூ.10
ஆண்டுச் சந்தா ரூ.150

# ஒரு காவல்துறை அரசு

பிரதம மந்திரி மோடி, "கோட்சேவை (காந்தியைப் படுகொலை செய்தவர்) கடவுளாக கருதுகிறார்" என்றும் கலவரத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அவரால் மீண்டும் ஒருமுறை சென்று பார்க்க இயலுமா என்றும் டிவிட்டர் பதிவின் வழியாக சவால் விட்ட காரணத்தால், குஜராத் மாநில சட்டமன்ற உறுப்பினரும் புகழ்பெற்ற தலித் இயக்கத்தின் தலைவருமான ஜிக்னேஷ் மேவானியை அசாம் காவல்துறையினர் கைது செய்தனர். ஆளும் பிஜேபியின் கையாளாக இந்தியாவின் காவல்துறை செயல்படுகிறது என்பது இதன்மூலம் மீண்டுமொரு முறை நமக்குத் தெரிய வந்துள்ளது. அசாம் காவல்துறையினர் மிக நீண்ட தொலைவு பயணம் செய்து, அவருடைய தொகுதி வரை வந்து அவரை கைது செய்து, அசாமிலுள்ள கோக்ரஜாருக்கு கொண்டு சென்றுள்ளனர். இந்த வழக்கில் அவருக்கு பிணை வழங்கப்பட்ட பிறகு, காவல்துறையின் வாகனத்தில் அவர் தனக்கு பாலியல் தொல்லை கொடுத்தார் என ஒரு பெண் காவல்துறை அதிகாரி கூறியதன் அடிப்படையில் மற்றொரு வழக்கை பதிவு செய்து, காவல்துறை மேவானியை உடனடியாக மீண்டும் கைது செய்தது. மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், முதல் வழக்கில் பிணை வழங்குவதற்கான விசாரணை நடந்த போது, இந்த இரண்டாம் வழக்கு பற்றிய எந்தவொரு தகவலையும் காவல்துறை குறிப்பிடவில்லை! மேவானியின் சிறைவாசத்தை நீட்டிக்கவே இந்த இரண்டாம் வழக்கு புனையப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. மேவானியைக் காவல்துறையின் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்வதற்கான சாக்குப்போக்காக இரண்டாவது முதல் தகவல் அறிக்கை புனையப்பட்டதாக, பொய்யான ஒன்றாக தோற்றமளிக்கிறது என இரண்டாவது வழக்கில் பிணை வழங்கும் போது, பார்பேட்டா மாவட்ட நீதிமன்றம் கண்டுகொண்டது. அஸ்ஸாம், (அதன் தொடர் விளைவாக) இந்தியாவும் "காவல் துறையின் அரசாக மாறிவிடும்" என நீதிமன்றம் தனது கவலையை வெளிப்படுத்தியது. அசாமில் பரவலாக நிகழும், குற்றம்சாட்டப் பட்டவர்கள் தப்பிக்க முனையும் போது சுடப்பட்டு காவல்துறையால் நிகழ்த்தப்படும் கொலைகளை கவனத்தில் எடுத்துக்கொண்ட மாவட்ட நீதிமன்றம் உயர்நீதிமன்றத்திற்கு சில யோசனைகளை தெரிவித்துள்ளது. அதாவது, "சட்டம், ஒழுங்கு பணியில் ஈடுபடும் ஒவ்வொரு காவல் துறையினரும் உடல்களில் பொருத்தப்படும் கேமராக்களை அணிய வேண்டும்; குற்றம் சாட்டப்பட்டவரைக் கைதுசெய்யப்போகும் போதோ அல்லது திருடப்பட்ட பொருளைக் கண்டறிவதற்காகவோ வேறு ஏதாவது காரணத்திற்காகவோ குற்றம் சாட்டப்பட்டவரை ஏதாவது இடத்திற்கு அழைத்துக்கொண்டு போகும் போது காவல்துறையினரின் வாகனங்களில் கண்காணிப்பு கேமராக்களை பொருத்த வேண்டும்; அனைத்து காவல் நிலையங்களிலும் கண்காணிப்பு கேமராக்களை பொருத்த வேண்டும்; அஸ்ஸாம் காவல்துறை தன்னைத் தானே சீரமைத்துக் கொள்ள இது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என உயர் நீதிமன்றம் வழிகாட்டலாம் என மாவட்ட நீதிமன்றம் சொல்லியுள்ளது. எதிர்பார்த்தது போன்றே, அசாம் காவல்துறை இந்தத் தீர்ப்பை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது. மேவானிக்கு வழங்கப்பட்ட பிணையை ரத்து செய்யாத அதேநேரத்தில், காவல்துறையினரின் செயல்பாடுகள் குறித்த மாவட்ட நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்களை உயர் நீதிமன்றம் தடை செய்துள்ளது. இது பரிதாபகரமானதாகும். ஏனென்றால், குடிமக்கள் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடும், நாடு முழுவதும் உள்ள காவல்துறையினர் மற்றும் ஆயுதப் படையினரின் செயல்பாடுகள் குறித்த மாவட்ட நீதிமன்றத்தின் பரிந்துரைகள் அமல் படுத்தப்படுவதற்கு தகுதியானதாகும்.

எந்தவிதமான எதிர்ப்புகளும் பிஜேபியை பெருமளவுக்கு அச்சம் கொள்ள வைக்கிறது என்பதை ஜிக்னேஷ் மேவானியின் கைது நடவடிக்கை அம்பலப்படுத்தியுள்ளது. மோடி குறித்த மிகச்சிறிய விமர்சனம் கூட, எதிர்க்கட்சியின் ஒரு சட்டமன்ற உறுப்பினரையே கைது செய்ய காரணமாகியுள்ளது. ஒரு தலித்துக்கு எதிராக, அவர் பாலியல் ரீதியாக தவறாக நடந்து கொண்டார் என தவறாக குற்றம்

சாட்டப்பட்டு, அவர் மீது முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது ஒன்றும் தற்செயல் நிகழ்வு அல்ல. அப்படியிருக்க, பாலியல் வன்முறைகள் குறித்து "பொய்யான புகார்களை" அளிப்பதாக பெண்கள் மீது, மேலாதிக்கம் மிகுந்த ஆணாதிக்க உரையாடல்கள் குற்றம் சாட்டுகின்றன. உண்மை என்னவென்றால், பெண்கள் அல்ல; காவல்துறையே இப்படியான பொய்யான வழக்குகளை தாக்கல் செய்கிறது. மேலும் பெரும்பாலான சமயங்களில், தலித்துகளும் ஆதிவாசிகளும் முஸ்லிம் ஆண்களும் தான் காவல்துறையினரால் இதுபோன்ற பொய்யான பாலியல் வன்முறை வழக்குகளில் குற்றம் சாட்டப்படுகின்றனர். இந்த ஒடுக்கப்பட்ட, சிறுபான்மை சமூகத்தை சார்ந்த ஆண்களை பாலியல் ரீதியில் அபாயகரமானவர்கள் என மனுஸ்மிருதியே வகைப்படுத்தியுள்ளது. இந்து மேலாதிக்கவாத அரசியலால் ஊதிப் பெரிதாக்கப் படும் இன்றைய மனுவாத அமைப்பு முறை, இது போன்ற தவறான கருத்துக்களை மறு உற்பத்தி செய்கிறது. காவல்துறையினரின் கொடூர மிருகத்தனத்திற்கு இந்தியா அவப்பெயர் பெற்றுள்ளது. இந்த நாட்டில், ஒவ்வொரு நாளும் ஏறக்குறைய ஐந்து நபர்கள் காவல்துறையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும்போது உயிரிழக் கிறார்கள். பொய்யான வாக்குமூலங்களை பெறுவதற்காக நிகழ்த்தப்படும் காவல்துறையின் சித்திரவதை பரவலாக உள்ளது. பார்பேட்டா மாவட்ட நீதிமன்றம் கவனப்படுத்தியது போன்று காவல்துறையினரின் கட்டுப்பாட்டின் கீழ் நடக்கும் கொலைகள் எப்போதுமே ஒரு "திரைக்கதை"யைப் பின்பற்றுகின்றன. அது, மீண்டும் மீண்டும் திரும்பத் திரும்ப நிகழ்கிறது. "இந்த மாநிலத்தில் தினசரி சம்பவங்களாக ஆகியிருக்கின்ற, குற்றம் சாட்டப்பட்டவரை கைது செய்யும் போது; நடுஇரவில் குற்றம்சாட்டப் பட்டவர் காவல் துறையினரின் கட்டுப்பாட்டில் இருந்து தப்பிக்க முனையும்போது; ஏதோ ஒன்றை கண்டுபிடிப்பதற்காக குற்றம்சாட்டப் பட்டவர் காவல்துறையினரை அழைத்துக் கொண்டு செல்லும் போது; அப்படி குற்றம் சாட்டப்பட்டவர்களை காவல்துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தி, கொல்வது அல்லது காயப்படுத்துவது; என்பது போன்று காவல் துறையினர் சொல்லிக்கொள்ளும் நிகழ்வுகளில் காவல்துறையினருக்கு சாதகமான நன்மதிப்பைப் பெற்றுத் தருவதற்காக" மேவானி மீது காவல் துறையினர் தாக்கல் செய்த முதல் தகவல் அறிக்கைகள் போன்ற பொய்யான முதல் தகவல் அறிக்கைகள் தாக்கல் செய்யப்படுகின்றன என இந்த நீதிமன்றம் சுட்டிக்காட்டியது. நரேந்திர மோடி முதலமைச்சராக இருந்த போது, காவல்துறையினரின் கட்டுப்பாட்டின் கீழ் முஸ்லீம் ஆண்கள் கொலை செய்யப்பட்டபோது, அவற்றை உடனடியாக கிடைத்த "நீதி"யின் வடிவமாக அவர் கொண்டாடினார். "குற்றவாளி களை நாம் என்ன செய்வது?" என்ற கேள்விக்கு, "அவர்களைக் கொல்லுங்கள்" என ஊர்வலங் களில் பெரும் கூட்டத்தைப் பதிலளிக்க வைத்தார். அதேபோன்று, காவல் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் நடைபெறும் கொலைகளை உத்தரப்பிரதேசத்தின் யோகி ஆதித்யநாத்தும் கொண்டாடினார். அவருடைய முதல் ஐந்து ஆண்டு ஆட்சியில், முஸ்லீம் "குற்றவாளி"களின் வீடுகள் தரைமட்டமாக்கப்படும் என்ற அச்சுறுத்தல்களுக்கு "புல்டோசர் நீதி" என்ற வார்த்தையை பிரபலப்படுத்த முயற்சித்தார். அதேபோன்று அரங்கேற்றப்பட்ட என்கவுண்டர் கொலைகளை "என்கவுண்டர் நீதி" என்கிறார்.

டெல்லியில், அமைதி வழியில் போராட் டத்தில் ஈடுபடும் பெண் போராட்டக்காரர்களை தடுப்புக்காவலில் கைது செய்யும் சமயங்களில், அவர்களை பாலியல் ரீதியாக தொல்லைக் குட்படுத்துவது, அவமானப்படுத்துவது போன்ற நடவடிக்கைகளில் டெல்லி காவல்துறையினர் ஈடுபடுவதாக தொடர்ச்சியான புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. காவல்துறையினரின் வன்முறைகள், சித்ரவதைகள், கொலைகள் என்ற அவமானகரமான நோயைத் தடுக்க, அடிப்படை உரிமைகளின் பாதுகாவலனான நமது உயர்மட்ட நீதித்துறை, உடலில் பொருத்தப்படும் கேமராக்கள், காவல் நிலையங்களில் காவல் துறையினரின் வாகனங்களிலும் கண்காணிப்புக் கேமராக்களை பொருத்துவதைக் கட்டாயமாக்க மறுக்கிறது. அமெரிக்காவில், நிராயுதபாணியான கறுப்பின குழந்தைகள், ஆண்கள், பெண்கள் மீது காவல் துறையினரால், அவர்களின் கட்டுப் பாட்டில் இருக்கும் போது கொலைகள் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. குற்றமிழைத்த காவல் துறையினர் பாதிக்கப்பட்டவரால் உண்மை யிலேயே அபாயத்தில் இருந்ததாக உணர்ந்தார்கள் என்று அரசு வழக்கறிஞர்களாலும், நீதிபதிக ளாலும் காரணம் சொல்லப்பட்டு, பல நேரங்களில் மன்னித்து விடப்படுகிறார்கள். ஆனால், இதைப்போன்ற கொலைகளுக்கு

எதிரான போராட்டங்களின் விளைவாக, காவல்துறையினர் உடலில் பொருத்தப்படும் கேமராக்களை அணிய வேண்டும் என்றும் கொலையோ அல்லது வேறு எந்த விதமான வன்முறையோ நிகழ்ந்தது என்றால், கேமராவில் பதிவான காணொளிகளை பொதுமக்களுக்கு காண்பிக்க வேண்டும் என்ற தேவை அதிகரித் துள்ளது. ஜிக்னேஷ் மேவானிக்கு ஒருமைப் பாட்டையும், ஆதரவையும் நாங்கள் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும், பழிவாங்கும் நோக்கி லான கைது நடவடிக்கைகள், பேச்சு சுதந்திரத்திற் கான தடை, பொய்யான முதல் தகவல் அறிக்கைகள் ஆகியவற்றிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்ட சட்டமன்ற உறுப்பினரே கூட பாதுகாப் பற்ற நிலையில் இருக்கும், மோடி ஆட்சியின் காவல்துறை அரசு, முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும் என்று கோருகிறோம். ❑

**எம்எல் அப்டேட் – தலையங்கம்**
**3–9 மே 2022**

**தமிழாக்கம் – செந்தில்**

**களஆய்வு**

# திராவிட மாடல் ஆட்சியிலும் தொடரும் உழைக்கும் மக்கள் மீதான தாக்குதல்கள்

*தமிழ்நாட்டில் திமுக 2021ல் ஆட்சிக்கு வந்தபின்னரும் உழைக்கும் மக்களுக்கு எதிராக, குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராக தாக்குதல்கள் தொடர்கிறது. சென்னை மயிலாப்பூர் தொகுதிக்கு உட்பட்ட இராஜா அண்ணாமலை புரம் பகுதியில் உள்ள கோவிந்தசாமி நகரில் 70 ஆண்டுகளுக்கும் மேலாக குடியிருந்து வரும் மக்கள் குடியிருப்பு களை உச்சநீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் அகற்றுகிறோம் என்ற பெயரில் வீடுகளை இடித்து தரைமட்டமாக்கி வாக்களித்த மக்களை நடுரோட்டில் நிறுத்தி வைத்துள்ளது திராவிட மாடல் அரசு!*

*கோவிந்தசாமி நகரில் மேற்படி இடத்தில் ஏற்கனவே குடியிருந்து வந்த அவர்களுக்கு 1971ல் அன்றைய திமுக அரசு 310 வீடுகளுக்கு குடிசை மாற்று வாரியம் மூலம் அங்கீகாரம் வழங்கியது. ஒவ்வொரு வருக்கும் தலா 420 சதுரடி நிலம் அரசாங்கத்தால் வழங்கப்பட்டு அந்த இடத்தில் தான் குடியிருந்து வருகிறார்கள். அவர்களுக்கு குடிநீர் வசதி, மின் இணைப்பு, கழிவுநீர் வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளை அரசாங்கம் செய்து கொடுத் துள்ளது. அங்கு வசிப்பவர்கள் அன்றாடக் கூலித் தொழிலாளர்கள். அந்த குடியிருப்புக்கு எதிராக பக்கிங்காம் கால்வாய் ஓடுகிறது. அந்த கால்வாயின் நடுவில் நீர்நிலையை ஆக்கிரமித்து திமுக அரசால் பறக்கும் இரயில் திட்டம் போடப் பட்டு அது செயல் பட்டுக் கொண்டிருக்கிறது.*

*இந்நிலையில் 2006ல் கோவிந்தசாமி நகர் குடியிருப்புக்கு பின்புறமாக உள்ள அப்பார்ட் மென்ட் குடியிருப்பில் உள்ள ராஜிவ் ராய் என்பவர், கோவிந்தசாமி நகர் குடியிருப்பு நீர்ப் பிடிப்பு பகுதிக்குள் வருகிறது என்றும் அதனை காலி செய்ய வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார். அந்த வழக்கை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது. அதனை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். அதில் ராஜீவ் ராய்க்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கப்பட்டது. மேலும் இந்த வழக்கை தமிழக அரசு சரியான முறையில் கையாளவில்லை என்றும் அதனால் நீதிமன்ற அவமதிப்பு வழக்கும் சேர்ந்து உச்சநீதிமன்றம் 6 மாத காலத்திற்குள் குடியிருப்புகளை அகற்ற வேண்டும் என்று 25.10.2021 அன்று உத்தர விட்டது. அதன்படியே இந்த வெளியேற்றும் நடவடிக்கை என்று தெரிவிக்கின்றனர்*

*திமுக அரசால் 1971ல் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வழங்கப்பட்ட இடத்தில் மக்கள் தங்களுக்கான வீடுகளை கட்டியுள்ளனர் அரசாங்கம் வழங்கிய நிலத்திற்கு வகைமாற்றம் செய்து பட்டா வழங்கவில்லை. 70 ஆண்டுகளுக் கும் மேலாக குடியிருந்துவரும் மக்களை, திடீரென வீட்டை இடித்துவிட்டு அவர்களை வெளியேற்றுவதும், அவர்களுக்கு மாற்று இடமாக 30 கிலோமீட்டருக்கு அப்பால் செம்மஞ்சேரி மற்றும் பெரும்பாக்கம் போன்ற பகுதிகளுக்கு அவர்களை துரத்தி அவர்களின் வாழ்வாதரத்தை அழிக்கிறார்கள்.*

*சிங்காரச் சென்னை, பொலிவுறு சென்னை என்ற பெயரில் உழைக்கும் மக்களை சென்னையை விட்டு துரத்துவது என்பது*

தொடர்கதையாகி உள்ளது. சென்னையில் நீர்ப் பிடிப்புப் பகுதியில் உள்ளவர்கள் என்று சொல்லி உழைக் கும் மக்களை சென்னையை விட்டு வெளியே துரத்தும் அதே நேரத்தில், பெரிய கல்விக் கொள்ளையர்கள், பெருமுதலாளிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ள நீர்நிலைகளைப் பற்றி வாய் திறக்காமல் இருந்துவரும் திமுக அரசின் திராவிட மாடல் பல் இளிக்கிறது. உழைக்கும் மக்களின் கட்டிடங்களை ஒழுங்குபடுத்துவதற்கு பதிலாக கட்டிடங்களை காலி செய்வது வாக் களித்த மக்களை காவு கொடுக்கும் செயலுக்கு ஒப்பானது.

இது குறித்து கோவிந்தசாமி நகர் பகுதியில் அனைத்திந்திய நீதிக்கான வழக்கறிஞர்கள் சங்கத்தின் வழக்கறிஞர்கள் சிவக்குமார், அதியமான் ஆகியோர் 09.05.2022 அன்று பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்தபோது, அங்கு ஐஸ் வியாபரம் செய்யும் அண்ணாமலை என்பவர் அந்த பகுதியில் 70 வருடங்களாக குடியிருந்து வருவதாகவும் அங்கு குடியிருக்கும் பெண்கள் பெரும்பாலும் வீட்டு வேலை செய்து வருவதாகவும் ஆண்கள் பெயின்டர், கொத்தனார் போன்ற தினக்கூலி வேலைகளை செய்து வருவதாகவும், இதுவரை இங்கு பயமில்லாமல் வாழ்க்கையை நடத்தி வந்த நிலையில் கடந்த மே 8ம் தேதி குடியிருப்புகளை தமிழ்நாடு அரசாங்கத்தின் நீர்வளத்துறை மற்றும் சென்னை பெருநகர, சென்னை மாநகராட்சி அதிகாரிகள் ஆகியோர் காவல்துறையுடன் வந்து வீடுகளை இடித்ததாகச் சொன்னார்.

அவ்வாறு இடித்துக் கொண்டிருந்த நேரத் தில் அங்கு குடியிருந்த இருந்த கண்ணையன் என்பவர் தன்னுடைய வாழ்நாள் முழுவதும் சிறுகச்சிறுக சேர்த்து உருவாக்கிய வீட்டை இடிப்பதை அவரால் தாங்கிக் கொள்ள முடியா மல் தீக்குளித்து விட்டார். அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டும் அவர் 09.05.2022 அன்று இறந்துவிட்டார். அவரின் இறப்பிற்கு திமுக



அரசுதான் பொறுப்பேற்க வேண்டும். அரசாங்கம் வழங்கிய வீட்டை இடிக்கச் சொல்லி உச்சநீதிமன்றம் உத்தரவிடும் நிலையில்தான் தமிழக அரசின் வாதம் இருந்துள்ளது. தமிழக அரசு ஏழை மக்கள் பக்கம் நிற்கவில்லை என்பதும் வழக்கு போட்ட ராஜீவ் ராயுடன் கூட்டு சேர்ந்து விட்டதும் சொல்லாமலேயே தெரிகிறது.

இறந்த கண்ணையன் குடும்பத்திற்கு தமிழக முதல்வர், ரூபாய் பத்து லட்சம் இழப்பீடு அறிவித்தார்.

காலம் காலமாக வாழ்ந்த மக்களை அவர்க ளுடைய வாழ்விடங்களில் இருந்து துரத்திவிட்டு அங்கு பூங்காக்களை அமைக்க திட்டம் தீட்டு கிறார்கள். பூர்வகுடி மக்களை நகரத்தை விட்டு வெளியே துரத்துவதற்கு திட்டம் தீட்டுகிறார்கள். அதிமுக அரசு அன்று இப்படி குடியிருப்புகளை அகற்றியபோது, அதற்கு எதிர்ப்பு தெரிவித்த திமுகதான் தற்பொழுது ஆட்சிக்கு வந்தபிறகு மக்களை சென்னையை விட்டுத் துரத்துகிறது. சென்னை நகரில் ஏழைகளுக்கும் உழைக்கும் மக்களுக்கும் இடமில்லை என்கின்றன திமுகவும் அதிமுகவும்.

மாற்றம் வரும் என்று நம்பித்தான் ஆட்சி அதிகாரத்தில் திமுகவை அமர வைத்தார்கள் உழைக்கும் மக்கள். குறவர் வீட்டில் இட்லி சாப்பிடுவதிலும் சாலையோர கடைகளில் தேனீர் அருந்துவதிலும் சமூகநீதி கிடைத்துவிடாது. நடைமுறையில் அந்த மக்களுக்கான உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதில்தான் சமூகநீதி உள்ளது.

2021 தேர்தலில் ஸ்டாலின்தான் வராரு விடியல் தரப்போறரு என்று பிரச்சாரம் செய்தார்கள். ஆனால் அந்த விடியல் யாருக் கானது என்பது இன்னும் கேள்விக் குறியாகவே உள்ளது.

வீட்டை இடிக்கும் பொழுது 10ம் மற்றும் 12ம் வகுப்பு படிக்கும் மாணவர்களின் வீடுகளை குறியீடு செய்திருந்தனர். தேர்வு நேரம் என்பதால் அவர்களுக்கு மட்டும் தேர்வு முடியும்வரை சலுகை வழங்கப்பட்டுள்ளது. தன்னை சுற்றி இருக்கும் வீடுகளை இடித்துவிட்டு, தேர்வு எழுதிய பிறகு உன் வீட்டை இடிக்க வருவோம் என்று சொல்லும்பொழுது அந்த இளம் சிறார்களால் எப்படி தேர்வில் கவனம் செலுத்த முடியும். இன்னொரு கண்ணையன் பலியாகாமல் இருக்க குடியிருக்கும் மக்களை அந்தப் பகுதியிலேயே அவர்களின் குடியிருப்புகளை ஒழுங்குபடுத்துவதும், அவர்களின் வாழ்வாத ரங்களை பாதுகாப்பதும்தான் உண்மையான சமூகநீதிக்கான அரசாக இருக்க முடியும். ❑

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்- லெனினிஸ்ட்) விடுதலை

# ஊழியர்கள் பயிற்சிமுகாம்



2022 மே 7,8 தேதிகளில் கொடைக்கானலில் இகக(மாலெ) மாநில ஊழியர் பயிற்சி முகாம் நடைபெற்றது. 23 மாவட்டங்களிலிருந்து 15 பெண் தோழர்கள் உட்பட மொத்தம் 100 பேர் கலந்துகொண்டனர். இதில் கட்சி, வெகுமக்கள் அமைப்புகளின் முன்னணி தோழர்கள் கலந்து கொண்டனர்.

இகக(மாலெ) மாநிலச் செயலாளர் தோழர் என்.கே.நடராசன் அறிமுக உரையாற்றினார். கட்சித் திட்டம் தலைப்பில் நடைபெற்ற முதல் அமர்விற்கு தோழர் தேசிகன் தலைமை தாங்கினார். தோழர் பாலசுந்தரம் விளக்கவுரையாற்றினார். பாசிசம் குறித்த மதிப்பீடு, நிலைப்பாடு, அதன் பரிமாணங்கள், எதிர்ப்புப் போராட்டங்கள் தலைப்பிலான இரண்டாம் அமர்விற்கு தோழர் ஜி.ரமேஷ் தலைமை தாங்கினார். தோழர் அ.சந்திரமோகன் விளக்கவுரையாற்றினார். பாசிச எதிர்ப்புப் பின்னணியில் தமிழக அரசியலும் நமது அணுகுமுறையும் என்ற மூன்றாம் அமர்விற்கு தோழர் த.சங்கரபாண்டியன் தலைமை தாங்கினார். தோழர் பாலசுந்தரம் விளக்கிப் பேசினார். கட்சி மறுசீரமைப்பு-முக்கிய அம்சங்கள் அதன் தேவை-ஊழியர் கொள்கை, கமிட்டி செயல்பாடு தலைப்பிலான நான்காம் அமர்விற்கு தோழர் கிருஷ்ணவேணி தலைமை தாங்கினார். தோழர் பழ.ஆசைத்தம்பி விளக்கிப் பேசினார். மறுசீரமைப்பு அமலாக்கம்-மாவட்ட, மாநில மாநாடுகள், தீப்பொறி-நிதி திரட்டல் தலைப்பில் நடந்த ஐந்தாம் அமர்விற்கு தோழர் பாலசுப்பிரமணியன் தலைமை தாங்கினார். தோழர் என்.கே.நடராஜன் விளக்க வுரையாற்றினார். கட்சித் திட்டத்தின் பின்னணியில் மாநில, மாவட்ட மாநாடுகள், கட்சியின் 11வது காங்கிரஸ் ஆகிய பொருட்கள் மற்றும் விவாதங்கள் குறித்து ஆறாவது அமர்வு நடைபெற்றது. ஒவ்வொரு அமர்விலும் பங்கேற்பாளர்கள் கருத்துகளை தெரிவித்தனர். ஒவ்வொரு அமர்வின் முடிவிலும் கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் தோழர் வீ.சங்கர் நிறைவுரை ஆற்றினார்.

மே 15-31 தேதிகளில் கட்சி மத்தியக் கமிட்டி அறிவித்துள்ள புல்டோசர் ஆட்சிக்கெதிரான பரப்புரை இயக்கத்தை மாவட்ட கட்சி அமைப்புகள் திட்டமிட்ட வகையில் நிறைவேற்றிட வேண்டுமென்றும் பயிற்சிமுகாம் முடிவுசெய்தது. இரண்டு நாள் நிகழ்ச்சியிலும் தோழர்கள் ஆவுடையப்பன், மங்கையர்க்கரசி பாடல்கள் பாடினர்.

இரண்டு நாள் நிகழ்ச்சியை வெகுசிறப்பாக நடத்திக்காட்டிய திண்டுக்கல் மாவட்ட ஊழியர்கள், தொண்டர்கள், மண்டப ஊழியர்கள், நிர்வாகிகள் கவுரவிக்கப்பட்டனர்.

ஏற்கனவே பொய் வழக்கில் ஒரு மாதத்திற்கு மேலாக திண்டுக்கல்லில் தங்கியிருந்த தஞ்சாவூர் தோழர்களை வெகுசிரமங்களுக்கிடையே வெகு சிறப்பாக திண்டுக்கல் மாவட்டக்குழு பராமரித்தது குறிப்பிடத்தக்கது. அதனைத் தொடர்ந்து இந்த பயிற்சி முகாமையும் சிறப்பாக நடத்திக் கொடுத்துள்ளது திண்டுக்கல் மாவட்டக் கமிட்டி.






# பயிற்சி முகாமில் மாநிலச் செயலாளர் தோழர் என்.கே.நடராஜன் உரையிலிருந்து

**தோழர்களே,**

மறுசீரமைப்பு இயக்கத்தின் ஒருபகுதிதான் ஊழியர்கள் பயிற்சிமுகாம். கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள்தான் ஊழியர்கள். முதலாளித்துவ கட்சிகள் ஓரிரு தலைவர்களின் சர்வ அதிகாரத்தில் இயங்கும். மாறாக கம்யூனிஸ்ட் கட்சி ஊழியர்களின் கூட்டுத் தலைமையில் இயங்கும். ஜனநாயக மத்தியத் துவக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு இயங்கும். எனவே கம்யூனிஸ்ட் கட்சியில் ஊழியர்கள் முக்கியமானவர்கள். இங்கு ஊழியர்களே தலைவர்கள். தலைவர்களே ஊழியர்கள். அந்தவகையில் இங்கு முக்கிய கட்சி ஊழியர்கள் கலந்து கொள்ளும் ஊழியர்கள் பயிற்சி முகாம் குறிப்பிடத்தக்கது. கட்சியின் ஊழியர்கள் கொள்கை பற்றி நீங்கள் நன்கு அறிவீர்கள். மறுசீரமைப்பு இயக்க ஆவணத்தின் இணைப்பில் ஊழியர்கள் கொள்கை பற்றி குறிப்புகள் இருக்கிறது. அதை மீண்டும் படித்துக் கொள்ளலாம்.

2021 ஆகஸ்ட் 8ம் தேதி கந்தர்வக் கோட்டையில் பொதுச் செயலாளரால் துவக்கிய இயக்கம் இன்றோடு 9 மாதங்கள் நிறைவு பெற்றுவிட்டது.

எந்த இயக்கமும் வெற்றி பெற வேண்டும் என்றால் ஊழியர்கள் முன்முயற்சி எடுத்தால் தான் வெற்றி பெறமுடியும். இந்த இயக்கம் செப்டம்பர் மாதம் கட்சியின் மாநில மாநாட்டோடு நிறைவு பெரும். நிறைவு பெறுகிறது என்றால் மறு சீரமைப்பு வலியுறுத்துகிற அடிப்படை அம்சங்களை தன்மயமாக்கிக் கொள்ளும்.

மறுசீரமைப்பு என்ன நோக்கத்திற்காக மாநிலக் கமிட்டியால் வலியுறுத்தப்பட்டது என்பதை மீண்டுமொருமுறை நினைவு கொள் வோம்.

நடந்த சட்டமன்ற தேர்தலில் நாம் வாங்கிய ஓட்டு மிகவும் அற்பமானது. இது இந்த தேர்தலில் மட்டுமல்ல கடந்த நீண்டகாலமாகவே இதே நிலைமைதான். நாம் செயல்படும் தளம் மிகவும் குறுகலானது. குறுகிய மக்கள் அடித்தளத்தை கொண்டிருக்கிறோம். நாம் ஒரு சிறிய வட்டத்திற்குள் திரும்ப திரும்ப சுற்றி வந்துகொண்டிருக்கிறோம் ஒரு வகையான விஷச்சுற்றில் மாட்டிக் கொண்டிருக்கிறோம். ஒருவகையான கெட்டி தட்டிய வேலை நடைக்கு ஆளாகியிருக்கிறோம். இத்தகைய நீண்டகால இந்த வகையான வேலை நடை கட்சி வளர்ச்சியைத் தடுத்துநிறுத்தும் தடைகல்லாக எழுந்து நிற்கிறது. இத்தகைய நிலைமையில் வேலைத் தளத்தை மாற்றியமைக்க வேண்டும். சிந்தனையில் செயல்பாட்டில் குறுகிய தன்மையை, இறுக்கமான, கமுக்கமான வேலைநடையை மாற்றியமைக்க வேண்டும். நாம் செயல்படும் குறுகியதளத்தை உடைத் தெறிய வேண்டும்.அதற்காக தேரந்தெடுத்த பகுதியில் கவனம் குவித்த ஆழமான வேலை, திட்டமிட்ட விரிவாக்கம் என்ற நோக்கில் திட்டமிட்டோம். மாவட்ட கமிட்டிகளை அடிப்படையாக கொண்டு திட்டமிட்டோம். மறுசீரமைப்பு இயக்கம் துவங்கி 9 மாதங்கள் நிறைவு பெற்றுவிட்டது. ஏதாவது புதிய மாற்றங்கள் ஏற்பட்டு இருக்கிறதா?

ஏதோ ஒரு வகையில் செயலூக்கம் பெற்று இருக்கிறது என்று சொல்லலாம். மைய முடிவுகள் அறை கூவல்கள் ஆகியவற்றை மாவட்டக் கமிட்டிகள் கவனத்தில் கொண்டுள்ளன. ஆனால் அவை சம்பிரதாயமாய் சுருங்கி நிற்கிறது.

நாம் இயக்கத்தை ஆய்வில் இருந்து துவங்கினோம். பல இடங்களில் அவை துவங்கவே இல்லை. அல்லது துவங்க மறுத்தது. கெட்டி தட்டிய வேலைமுறை பல தோழர்களுக்கு வேதனையையும் வருத்தையும் உருவாக்கியது. நமது வேலை நடையில் ஆய்வு படிப்பு என்பது இயல்பாக மாறவேண்டும். கம்யூனிஸ்ட்கள் விவரங்களில் இருந்து உண்மையை தேடு பவர்கள். ஆய்வு படிப்பு ஊழியர்களுக்கு இயல்பாக வில்லை என்றால், சமூகத்தின் சீரழிந்த சிந்தனைகள் ஆக்கிரமிக்கும். வரும் பிரச்சனைகளுக்கு பின்னால் ஓடிக்கொண்டே இருப்போம். நமது உணர்வு பூர்வமான திட்டமிட்ட வேலை இருக்காது. நோக்க மில்லாத, குறிக்கோள் இல்லாத எல்லைக்கு போயி ஆளும் வர்க்கத்திற்கு சேவை செய்யும் அரசியலற்ற நடவடிக்கையாக மாறும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஆய்வுகள் அங்கொன்றும் இங்கொன்றும் நடந்தது. அதற்கான விளைவுகளும் ஏற்பட்டு இருக்கிறது என்பதை ஊழியர்கள் படித்து அறிய

வேண்டும்.

இதற்கு அடுத்து ஊராட்சி மட்ட அணி திரட்டல். பல ஊராட்சிகளில் நடந்தி ருக்கிறது. சில நல்ல விளைவுகளைக் கூட ஏற்படுத்தி இருக்கிறது. நாம் நிர்ணயத்த இலக்குகளை எட்டவில்லை. நாம் ஆழமான வேலையை வளர்த்தெடுக்க நினைத்தோம். ஆனால் அவை மேலோட்டமான வேலையாக தொடர்கிறது என்பதை கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும். தற்போது ஒன்றிய மட்ட அணிதிரட்டல் அல்லது பகுதி மட்ட அணிதிரட்டல். எந்த வேலை இருந்தாலும் இந்த வேலைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என வலியுறுத்தியது. உற்சகமாக துவங்கி ஒரு கட்டத்தில் நின்று விட்டதுபோல் தெரிகிறது.

கட்சி உறுப்பினர் புதுப்பித்தல், தீப்பொறி சந்தா சேர்த்தல் ஒரு எல்லைக்கு மேல் நகர மறுக்கிறது.

இதற்கெல்லாம் இந்த பயிற்சி முகாம் தீர்வு கண்டு எழுச்சி பெறவேண்டும்.

இம்மாத இறுதிக்குள் எஞ்சியுள்ள ஒன்றிய அணி திரட்டலை முடித்தாகவேண்டும்.

ஜூன் மாதம் மாவட்ட மட்ட அணிதிரட்டல் முடித்தாக வேண்டும்.

ஜூலை, ஆகஸ்டில் மாவட்ட மாநாடுகள் நடத்தியாகவேண்டும்.

செப்டம்பர் மாதம் அநேகமாக மாநில மாநாட்டை நோக்கி செல்லவேண்டும்.

மாநில மாநாட்டிற்கு செல்லும் முன் 10000 உறுப்பினர் எண்ணிக்கையை எட்டியாக வேண்டும்.

11வது கட்சி காங்கிரஸ் அடுத்த ஆண்டு பிப்ரவரி நடுவில் நடக்க இருக்கிறது. அதற்கு மாநில இலக்கு ரூ. 5 லட்சம் அது அல்லாமல் வெகு மக்கள் அமைப்பிற்கு தனித்தனியாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது

மாவட்ட, மாநில மாநாடு கட்சி காங்கிரஸ் என நிதியின் தேவைகள் அதிகரித்து உள்ளன. அப்படியானால் நாம் தீவிர நிதி திரட்டலுக்கு திட்டமிடவேண்டும். ❑

# இகக(மாலெ) அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் தோழர் சங்கர் ஆற்றிய உரையின் சில பகுதிகள்

## பகுதி 1

### கட்சித் திட்டம் குறித்து

கம்யூனிஸ்ட் கட்சியின் திட்டம் என்பது அடிப்படையில் போர்த் தந்திரம், செயல் தந்திரம் குறித்தது, புரட்சியின் பாதை குறித்தது ஆகும். இந்திய சமூகம் பற்றிய பகுப்பாய்வு, இந்திய அரசு அதன் தன்மை குறித்த மதிப்பீடு, சமூகத் தில் உள்ள வர்க்க, சமூக சக்திகள், அதன் சமன்நிலை, முதன்மையான முரண்பாடு இவை அனைத்தையும் குறித்த மதிப்பீடுகளின் அடிப்படையில் இந்தியப் புரட்சிக்கான பாதை போர்த்தந்திரம், செயல் தந்திரம் வகுக்கப் படுகிறது.

### நிலப்பிரபுத்துவத்தை கட்டிக் காக்கிறது முதலாளித்துவம்

நாம் இந்திய சமூகத்தை அரை காலனி, அரை நிலப்பிரபுத்துவ சமுதாயம் என வரையறை செய்ததை மாற்றி, "விவசாயம் மேலோங்கிய, பின் தங்கிய முதலாளித்துவ சமுதாயம்" என வரையறுக்கிறோம். ஆனால், அதே நேரத்தில், மிக வலுவான நிலப்பிரபுத்துவ மிச்ச சொச்சங்கள் நிலவுகிறது என்கிறோம். இது முதலாளித்துவ வளர்ச்சி இயக்கப் போக்கில், நிலப்பிரபுத்துவ மிச்ச சொச்சங்கள் தானே அழிந்து போகும் என எந்த விதத்திலும் அர்த்தமாகாது. மாறாக, மேலை நாடுகளைப் போலல்லாமல், இந்தியாவில் நிலப்பிரபுத்துவ மிச்ச சொச்சங்களைக் கட்டிக் காக்கிற, அவற்றுக்கு வலு சேர்க்கிற பணியையும் அவற்றை நிர்மூலமாக்க வேண்டிய, முற்போக்கு பாத்திரம் ஆற்ற வேண்டிய முதலாளித்துவம் தான் செய்கிறது. இதுதான், இந்தியாவின் குறிப்பான தன்மை ஆகும். எனவே, நிலப்பிரபுத்துவ மிச்ச சொச்சங்களை துடைத்தெறிய வேண்டிய பணியை நிறைவேற்றத்தக்க ஆற்றல் படைத்த முற்போக்கு வர்க்கம், விவசாயத் தொழிலாளர்களையும் உள்ளடக்கிய பாட்டாளி வர்க்கமாகவே இருக்கிறது. இந்திய சமுதாயத்தை, அரசியல் கட்டமைப்புகளை ஜனநாயகப்படுத்தும் ஆற்றலை இந்திய முதலாளித்துவ வர்க்கம் இழந்து விட்டது

என்பது மட்டுமல்ல, அது நிலவுகிற பின் தங்கிய, நிலப்பிரபுத்துவ அம்சங்களைக் கட்டிக் காக்கும் பிற்போக்கு வர்க்கமாக சீரழிந்து போய் விட்டது.

இந்திய முதலாளித்துவ வர்க்கம், ஏகாதிபத்திய சக்திகளோடு கரம் கோர்த்துக் கொண்டு, நிலப்பிரபுத்துவ அம்சங்களை கட்டிக்காப்பது, அவற்றுக்கு வலு சேர்ப்பது என்பதன் மூலம், இந்திய அரசு கட்டமைப்புக்கு தலைமை தாங்குகிறது. தன்னை வலுப்படுத்திக் கொள்வதற்காக மேற்கொள்ளும் வர்க்க சமரசத்தின் காரணமாக, அது இந்திய சமுதாய வளர்ச்சியை பின்னோக்கித் தள்ளுகிறது, உருக்குலையச் செய்கிறது. அதுதான் இந்திய முதலாளித்துவத்தின் உருக்குலைந்த வளர்ச்சிக்கு, அதன் வெளிப்பாடான வலுவான சாதீய பிரச்சனைகளுக்கு, மோதல்களுக்கு, பெண்ண டிமைத் தனத்தைக் காப்பதற்கு, தேசிய இனங் களின் சிறைச்சாலை ஆவதற்கு காரணமாக அமைகிறது. அதன் மூலம், தன்னைத் தற்காத்துக் கொள்கிறது. நவ தாராளவாத கால கட்டத்தின் பின்னணியில், இந்திய ஆளும் வர்க்கம், தன்னை பாதுகாத்து கொள்வதற்காக பழைய முறையில் ஆள முடியாது என்பதால், பெயரளவிற்கான ஜனநாயக முகமூடிகளையும் கூட தூக்கி எறிந்து விட்டு, தனது உண்மை முகமான பாசிச சர்வாதிகாரத்தை முழுமூச்சாக நடத்திட எத்தனிக்கிறது. அதுதான் மோடி தலைமையிலான பிஜேபி ஆர்எஸ்எஸ் ஒன்றிய அரசாக இன்று உருவெடுத்து இருக்கிறது.

### போர்த் தந்திரம்

நாம் ஏன் மத்தியில் ஆட்சிக்கு வருவது, அதைக் கைப்பற்றுவது குறித்து சொல்லவில்லை என சில தோழர்கள் கவலை தெரிவித்தனர். அந்த பிரச்சனையை ஆட்சிக்கு வருவது மாநில அளவிலா அல்லது ஒன்றிய அளவிலா என காண்பதை விட ஒரு புரட்சிகர இயக்கப்போக்கு எப்படி இருக்கலாம் என காண்பது அதைப் புரிந்துகொள்ள உதவியாக இருக்கும்.

### அனுபவங்களை இறக்குமதி செய்ய முடியாது

புரட்சி குறித்த இரண்டு முக்கிய அனுபவங்கள் உலக அளவில் நம் முன்னால் வந்திருக்கின்றன. ஒன்று, ரஷ்ய சோசலிச புரட்சி அனுபவம். மற்றொன்று சீனத்தின் புதிய ஜனநாயகப் புரட்சி அனுபவம். ரஷ்யாவில் நடந்த புரட்சி ஒரு பின் தங்கிய முதலாளித்துவ நாட்டில் நடந்த பாட்டாளி வர்க்கப் புரட்சி. தொழிலாளர் வர்க்கம் அந்தப் புரட்சியின் தலைமையாக, உந்துசக்தியாக இருந்தது. தொழிலாளர் பேரெழுச்சி என்பது அந்தப் புரட்சியின் பாதையாக இருந்தது. சோவியத்துக்கள், அன்றைய ரஷ்ய முதலாளித்துவ அரசுக்கு எதிரான, இணை அதிகார மையங்களாக உதித்தன. மக்கள் அதிகாரத்தின் மையங்களாக, ஜார் ஆட்சிக்கு எதிரான, இணை அதிகார மையங்களாக இருந்த சோவியத்துக்கள் எல்லாம் சேர்ந்துதான் புரட்சிக்குப் பிந்தைய, மாற்று அரசு அதிகாரத்தின் அஸ்திவாரங்களாக அமைந்தன.

சீனம் ஒரு அரைக் காலனி அரை நிலப் பிரபுத்துவ நாடாக இருந்தது. அங்கு ரஷ்யா போன்ற சோசலிச புரட்சி பாதையை பின்பற்ற முடியாது. மாறாக, சீனத்திற்கான புதியதோர் பாதையாக புதிய ஜனநாயகப் புரட்சி எனும் பாதையை மாவோ முன்வைத்தார். கிராமங்களில் தளப் பிரதேசங்களை உருவாக்குவது, நகரங்களை சுற்றி வளைப்பது என்பது போன்ற தந்திரங்களை சீன கம்யூனிஸ்ட் கட்சி முன்வைத்தது. தொழிலாளர் வர்க்கத் தலைமையிலான, விவசாய, குட்டி முதலாளித்துவ வர்க்கங் களையும் உள்ளடக்கிய புரட்சிகர வர்க்கங்களின் ஆட்சியை நிறுவுவது என்பது அவர்களின் குறியாக இருந்தது.

இது தவிர, கியூபா, வியட்நாம் போன்ற வேறுபட்ட அனுபவங்களும், லத்தீன் அமெரிக்க நாடுகளில் நடந்து வரும் போராட்டங்களும் நம் முன்னால் இருக்கின்றன. கருத்தியல் மேலாதிக்கம், தொழிற்சாலை கவுன்சில்கள் போன்ற கருத்துக் கோப்புகள் கிராம்சியின் பங்களிப்பாக இருக்கிறது. இந்தியாவின் இன்றைய பாசிச வளர்ச்சி பின்னணியில், நாம் கிராம்சியின் கருத்துக்களை மறுவாசிப்பு மேற்கொண்டிட அவசியம் இருக்கிறது. ஆனால், அத்தகைய அனுபவங்கள் எவற்றையும் அப்படியே இறக்குமதி செய்ய முயற்சிப்பது இயக்க மறுப்பியல் பார்வை ஆகும்.

இந்தியாவில் நாம் ரஷ்யப் பாதையையோ, சீனப் பாதையையோ மட்டுமே பின்பற்றுவது என்பது யதார்த்த நிலைமைகளுக்குப் புறம்பானதாக இருக்கும். இந்தியாவின் குறிப்பான நிலைமைகளில் நாம் இந்த அனைத்து அனுபவங்களையும், கருதுகோள்களையும், கருத்துக் கோப்புகளையும் கிரகித்துக் கொண்டு, இந்திய மண்ணுக்கான ஒரு புதிய பாதையை உருவாக்குவதுதான் பொருத்தமானதாக இருக்கும். அதற்கான ஒரு முயற்சிதான் நமது கட்சித் திட்டம்.

நம்முடைய நிலைமைகளுக்கும் புரட்சிக்கு

முந்தைய சீனத்தின் நிலைமைகளுக்கும் கூடுதல் நெருக்கம், ஒத்த தன்மைகள் காணப்பட்டாலும், நம் நாட்டில் அதிகரித்து வரும் முதலாளித்துவ வளர்ச்சி, கிராமப் புறங்களையும், விவசாயத்தையும் அதிகரித்த அளவில் ஊடுருவும் அந்த வளர்ச்சி, தொழிலாளர் பேரெழுச்சியின் பங்கு கூடுதலான அம்சமாக இருப்பதைச் சுட்டிக் காட்டுகிறது. அதே போல, கிராமப் புறங்களில் மக்கள் அதிகாரத்தை நிறுவக் கூடிய கிராமக் கமிட்டிகள் போன்ற வடிவங்களை உருவாக்குவதும் கூட அதிக கவனத்தைக் கோருகிறது. மேலும், மிக நீண்ட காலமாக நிறுவனமயமாகி இருக்கும் ஒரு பாராளுமன்ற ஜனநாயக முறை, அதிகாரங்கள் மையப் படுத்தப்பட்ட ஒன்றிய அரசு முறை, நிலையான ராணுவம், பல கட்சி ஜனநாயக முறை மூலம் நடைமுறைப் படுத்தப்படும் முதலாளித்துவ (சர்வாதிகார) ஆட்சி, அதையே பாசிச ஆட்சி முறையாகவும் தற்போதைய ஆட்சியாளர்களால் பயன்படுத்த முடிகிறது என்கிற யதார்த்தங்கள் இந்தியப் புரட்சியின் பாதை முற்றிலும் வேறுபட்டதாக இருக்கும் என்பதை சுட்டிக்காட்டுகின்றன.

### மாநில அரசு சில விவாதங்கள்

பாராளுமன்ற ஜனநாயக முறைக்குள், அதன் அனைத்து விதமான எல்லைகளோடு கூடவே, செயல்பட வாய்ப்பு இருக்கக் கூடிய இன்றைய நிலைமைகளில், ஏதாவது ஒரு மாநிலத்தில், மாநில அளவில் ஆட்சிக்கு வருவது கம்யூனிஸ்டுகளுக்கு முடியலாம் என்கிற சாத்தியப்பாட்டை நாம் மறுத்து விட முடியாது. ஆனால், அப்படிப்பட்ட ஒரு மாநில அரசு எப்படிப் பட்டதாக இருக்கும் என்பதே கேள்வி.

இது இந்திய கம்யூனிச இயக்கத்தில் நீண்ட விவாதத்திற்கு உள்ளாகி இருக்கும் ஒரு கேள்வி. '50களில் கேரள மாநிலத்தில் ஆட்சி பீடமேறிய கம்யூனிஸ்ட் தலைமையிலான அரசு, மைய அதிகாரத்திற்கு எதிராக செயல்பட்ட போது, மக்கள் சார்பான, நிலப்பிரபுத்துவ முதலாளித்துவ அரசுக்கு எதிரான சட்டங்களை இயற்றிய போது, ஒன்றிய அரசால் கலைக்கப்பட்டது. பிற்காலத்தில், மீண்டும் ஆட்சிக்கு வருகிற போது, அந்த கட்சிகள், ஆட்சி கலைக்கப் படாமல் தொடர்கிற விதத்தில், கட்சி திட்டம் திருத்தப்பட்டது என்பது கவனிக்கப்பட வேண்டியது. சிபிஎம்மின் 1964 திட்டத்தின் பாரா 112 பற்றிய விவாதம் மிகவும் பிரபலமானது. 1. அத்தகைய அரசுகள் மக்களின் உடனடி சீர்திருத்தங்களுக்கான அரசாக இருக்கும் என்பது. 2. மைய அரசில் பங்கேற்கலாம் என்கிற திருத்தம். 3. கம்யூனிஸ்டுகள் தலைமையிலான மாநில அரசு என்பது ஒரு மாறிச்செல்லும் கட்டத்திற்கான அரசு, அது மக்களின் புரட்சிகர போராட்டத்திற்கான மையமாக திகழும் அரசு என்ற கருத்துக்கோப்பை நீர்த்துப் போகச் செய்தது. இந்தப் பின்னணியில் பார்க்கும் போது, மேற்கு வங்கத்தில் இடதுசாரிகளின் சரிவை புரிந்து கொள்வதற்கான திறவுகோலாக அந்த பாரா 112ல் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களை காணலாம்.

நாம் அத்தகைய தவறுகளை செய்திடக் கூடாது என்பதில் தெளிவாக இருக்கிறோம். ஒரு வேளை ஏதாவது மாநிலத்தில் ஆட்சிக்கு வரும் சூழல் எழுமானால், அந்த மாநில அரசு, மக்களின் புரட்சிகர போராட்டங்களின் மையமாக திகழும். அதுவே, அதன் தலையாய செயல்பாடாக இருக்கும். முதலாளித்துவ அரசுகளின் சீர்திருத்தங்களுக்கு நேர்மாறாக, மக்கள் சார் சீர்திருத்த பணிகளை மேற்கொள்ளும் அரசாக அது இருக்கும். அப்படி இருக்கிற பட்சத்தில், அந்த மாநில அரசு கேரள அனுபவத்தை சந்திப்பது தவிர்க்க முடியாததாக இருக்க எல்லா வாய்ப்புகளும் இருக்கிறது. அதுவே, மக்கள் போராட்ட மையமாக இருக்கும் போது, இந்திய ஆளும் வர்க்கத்தின் அடக்குமுறைக்கு ஆளாவது தவிர்க்கப்பட முடியாதது. அப்படி வரும்போது, அது ஒரு நாடு தழுவிய புரட்சிகர மக்கள் போராட்டத்திற்கான, புரட்சிகர ஜனநாயகத் துக்கான சூழலை உருவாக்கிடும் ஆற்றல் படைத்ததாக இருக்கும். அதைத்தான், இந்திய சூழலில் ஒரு வேறுபட்ட சூழலாக நாம் காண்கிறோம்.

ஆனால், இறுதி வெற்றிக்கான, ஒரு தீவிர சமூக மாற்றத்திற்கான சூழல் என்பது எப்படி இருக்கும் என்பதை கட்சித் திட்டம் மிக அழுத்தமாக விளக்கி இருக்கிறது. அத்தகைய ஒரு சூழல் மிக நீண்ட தூரம் என்றாலும் மிகவும் வேறுபட்ட ஒரு சூழல் என்றாலும், இன்றைக்கு நிலவும் சூழல் அல்ல என்றாலும், கண்டிப்பாக அதனை நம்மால் சித்திரப்படுத்த முடியும். அதனால் தான், கட்சி, அய்க்கிய முன்னணி, மக்கள் படை ஆகிய மூன்றும் ஒரு புரட்சிகர சமூக மாற்றத்திற்கான முன்நிபந்தனை என சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்க ஆவணங்கள் சுட்டிக்காட்டுகின்றன. நமது கட்சித் திட்டமும் அதை அங்கீகரிக்கிறது. ஆனால், நாம் இன்று

சந்திக்கும் காலக்கட்டம் நீண்ட கால ஆயுதப் போராட்டத்திற்கான காலக்கட்டம் அல்ல, மாறாக அது ஒரு நீண்ட கால அரசியல் போராட்டத் திற்கான காலக்கட்டம் ஆகும்.

### அமைதி வழி என்பது பாராளுமன்ற வழி அல்ல

மிகவும் விதிவிலக்கான சூழலில், இன்றைய தினம் நாம் கற்பனை கூட செய்ய முடியாத ஒரு சூழலில் அமைதி வழியில் மாற்றம் ஏற்படலாம் என்பது தத்துவரீதியாக அத்தகைய ஒரு சாத்தியப்பாட்டை காணத் தவறக் கூடாது என்பதற்காக மட்டுமே சொல்லப்படுகிறது. அமைதி வழியில் மாற்றம் என்பது பாராளுமன்ற வழியில் மாற்றம் என பொருள் அல்ல. இந்தியாவில் மிக நீண்ட மக்கள் போராட்டம், போர்க்குண மிக்க போராட்டங்கள் நடந்த பிறகுதான் அதன் காரணமாகத்தான் சுதந்தரம் பறித்தெடுக்கப் பட்டது. அதுவே தீர்மான கரமானது. ஆனால், அதற்கு இன்னொரு காரணமும் இருக்கிறது. அதாவது, அன்றைய பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் தகர்ந்து கொண்டிருந்தது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் பழைய நிலைமையில், பழைய விதத்தில் ஆள முடியாது என்கிற நிலைமைக்கு வந்திருந்தது. தீவிர மக்கள் போராட்டம் ஒருபுறம், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் சரிவு மறுபுறம் என்கிற பின்னணியில்தான் ஒப்பீட்டளவில் அமைதி வழியில் (ஒரு ஆயுதப் போராட்டம், படை, வன்முறை, போர் ஆகியன முதன்மை பாதையாக இல்லாமலே) இந்தியா சுதந்தரம் பெற்றது. அது போரின் மூலம் பெற்ற சுதந்தரம் அல்ல, மாறாக, மக்கள் எழுச்சியின் அடிப்படையில், போர்க்குணமிக்க போராட் டத்தின் அடிப்படையில், ஆனால், ஒரு ஒப்பந்தத்தின் மூலம் பெற்ற சுதந்தரம் ஆகும். இது மிகவும் குறிப்பிடத் தக்க ஓர் விதிவிலக்கான அனுபவம் ஆகும். இதைத் தான் நாம் அர்த்தப் படுத்துகிறோம் என நாம் சொல்லமுடியாது. இது போன்றதொரு சூழலை, ஆனால் முற்றிலும் வேறுபட்டதொரு சூழலை நாம் அர்த்தப் படுத்துகிறோம்.

### சில வரையறைகளும் மறுவரையறைகளும்

அய்க்கிய முன்னணி என்பது அரசியல் கட்சிகளின் கூட்டணி அல்ல, தேர்தல் கூட்டணிகள் அல்ல, ஒத்த கருத்துள்ளவர்களோடு இணைந்த மேடைகள் அல்ல, அது வர்க்கங்களின் கூட்டணி ஆகும்.

சக்திகளின் சமநிலை என்பது அரசியல் கட்சிகளோடு காணப்படும் உடன்பாடோ, தேர்தலில் மேற்கொள்ளப்படும் தொகுதி உடன்பாடோ அல்ல, அது தொழிலாளர் வர்க்கம், விவசாயத் தொழிலாளர் வர்க்கம், நகர்ப்புற கிராமப்புற கீழ் நடுத்தர வர்க்கங்களின் கூட்டணியோடு, அந்த வர்க்கங்களின் ஒற்றுமையோடு, அதற்கு சாதகமாக, இதர ஊசலாடும் வர்க்கங்களை எவ்வளவு தூரம் வென்றெடுப்பது என்பது குறித்ததும் அதையொட்டி வர்க்க சமன்நிலையில் ஏற்படும் மாற்றங்கள் குறித்தது ஆகும்.

வர்க்கப் போராட்டம் என்பது தொழிற்சாலைகளில் நடக்கும் பொருளாதாரப் போராட்டம் அல்ல. ஒரு முதலாளிக்கு எதிரான போராட்டம் அல்ல, மாறாக, ஒட்டுமொத்த முதலாளித்துவ வர்க்கத்துக்கே, ஒட்டுமொத்த ஆளும் வர்க்கங்களுக்கே எதிரான போராட்டம் ஆகும். அரசுக்கு, ஆளும் வர்க்கங்களுக்கு, அதிகாரத்திற்கு, உள்ளூர் ஆதிக்கங்களுக்கு சவால் விடும் அனைத்துமே வர்க்கப் போராட்டங்கள் தான். சில சமயங்களில் அது சாதி ஆதிக்கத்திற்கு எதிரானதாக வெளிப்படலாம். சில சமயங்களில், அது ஆணாதிக்கத்திற்கு எதிரானதாக வெளிப் படலாம். வேறு சில சமயங்களில் அது மதவெறிக்கு எதிரானதாக, வெறுப்பு அரசியலுக்கு எதிரானதாக, கார்ப்பரேட் ஆதரவு அரசியலுக்கு எதிரானதாக வெளிப்படலாம். எனவே, இந்தியா போன்ற பரந்து விரிந்த நாட்டில், பல தரப்பட்ட மக்கள் வாழும் நாட்டில், சிக்கலான பல பிரச்சனைகள் நிலவி வரும் நாட்டில், வர்க்கப் போராட்டமும் பல தரப்பட்ட பரிமாணங்களையும், பல தரப்பட்ட முகங்களையும், பல தரப்பட்ட வடிவங்களையும் கொண்டதாக, துடிப்பு மிக்கதாக, புறநிலைமை களுக்கு ஏற்ப மாறக் கூடியதாக இருக்கும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதனை வெறும் பொருளாதார வகையினமாக சுருக்கிவிடக் கூடாது.

சாதி ஒழிப்பு என்பதை புதிய ஜனநாயகப் புரட்சியின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக நமது கட்சித் திட்டம் முன்வைத்திருக்கிறது. பார்ப்பனீயம் அல்லது பிராமனீயம் என்பது ஒரு கருத்தியல். அது பார்ப்பனர்கள் அல்லது பிராமணர்களை மட்டுமே குறிப்பது அல்ல. சாதீயப் படிநிலையை, தர வரிசையை, சாதீய ஏற்றத்தாழ்வை, சாதி அடிப்படையில் மனிதனை மனிதன் சுரண்டுவதை, சாதீய ஆதிக்கத்தை, பிறப்பால் ஏற்றத்தாழ்வை நியாயப்படுத்துகிற அனைத்துமே பார்ப்பனீய கருத்தியல் என்றுதான் சொல்ல வேண்டும். இது ஒரு நிலப்பிரபுத்துவ

அம்சமே. இத்தகைய கருத்தியலை யார் வெளிப்படுத்தினாலும் அது எதிர்க்கப்பட வேண்டியது ஆகும். இதில் எந்தவிதமான சமரசமும் கிடையாது.

அதே போல, பெண்களின் சமத்துவம், பெண்கள் விடுதலையும் கூட புதிய/ மக்கள் ஜனநாயகப் புரட்சியின் மற்றுமொரு முக்கிய இலக்கு ஆகும். இது இன்று நிலவும் ஆணாதிக்க சமுதாயத்தை புரட்டிப் போடுவதன் மூலம் மட்டுமே, ஒரு புதிய சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதன் மூலம் மட்டுமே சாத்தியம் ஆகும். பெண்ணடிமைத் தனத்தை ஒழிப்பது, பெண்கள் விடுதலை என்பது புரட்சியின் மிக முக்கிய கடமை ஆகும்.

நாட்டின் ஒற்றுமை என்பது நாட்டிலுள்ள அனைத்து தேசிய இனங்களுக்குமான சம உரிமை என பொருள்படும். சம உரிமை எனபது தேசிய இடங்களின் சுயநிர்ணய உரிமை ஆகும். தேசிய இனங்கள் தமது கலாச்சாரத்தை, பண்பாட்டை, தமது மொழியை காத்துக் கொள்வதற்கான உரிமை ஆகும். தமது நிலைப்பாட்டை தாமே நிர்ணயித்துக் கொள்ள உரிமை இருக்கும் போதுதான் ஒற்றுமை என்பது உண்மையான நாட்டு ஒற்றுமையாக இருக்க முடியும். துப்பாக்கி முனையில், ராணுவ அடக்குமுறையின் மூலம் நாட்டு ஒற்றுமையை சாதித்துவிட முடியாது. அதனை மேலிருந்து கட்டிவிட முடியாது. நாட்டு ஒற்றுமை என்பது, தேசிய இனங்களின் ஒற்றுமை என்பது கீழிருந்து கட்டப்பட வேண்டும். தேசிய இனங்களின் முழுமையான சுய நிர்ணய உரிமையையும், சுதந்தரத்தையும் அங்கீகரிக்கிற ஜனநாயகம் நிலவும் போதுதான் நாட்டு ஒற்றுமை என்பது வலுவானதாக திகழும். அப்போதுதான், பல்வேறு தேசிய இனங்களை உள்ளடக்கிய ஒன்றுபட்ட ஒரு நாடு உருவாக முடியும். தேசிய இனங்களின் உரிமைகளை அங்கீகரிப்பது என்பது பிரிவினையை தூண்டுவது ஆகாது, மாறாக, நாட்டின் உண்மையான ஒற்றுமையை, வலுவான ஒற்றுமையை கட்டி எழுப்புவது ஆகும். தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டுவதும் கூட புதிய ஜனநாயகப் புரட்சியின் மற்றுமொரு முக்கிய கடமை ஆகும்.

இவையெல்லாம் கூட நமது கட்சித் திட்டத்தின் மிக முக்கிய அங்கங்கள் ஆகும். இவற்றை வேறு கட்சிகளின் திட்டங்களில் காண்பது அரிதாக இருக்கிறது என்பது கவனிக்க வேண்டியது.

**செயல் தந்திரம்**

**நீண்ட கால அரசியல் போராட்டம்**

நீண்ட கால அரசியல் போராட்டம் என்பது சக்திகளின் அல்லது வர்க்கங்களின் சமன் நிலையில் மாற்றம் கொண்டு வருவதை, அத்தகைய சமன்நிலையை புரட்சி நடத்தும் கடமைக்கு சாதகமாக திருப்புவதை நோக்கமாகக் கொண்டதாகும். அது வெறும் தேர்தல் கூட்டணி தொடர்புடையது அல்ல, போராட்ட முன்னணி கள் அல்ல. மாறாக, அத்தகைய, குறைந்தபட்ச திட்டத்தின் அடிப்படையில் அமையும் போராட்ட முன்னணிகள், சில சமயங்களில், எதிர்கால அய்க்கிய முன்னணிக்கான சில ஆரம்ப கட்ட கூறுகளைக் கொண்டதாக இருக்கலாம். எனவே, ஒரு நீண்ட கால அடிப்படையிலான ஒரு அய்க்கிய முன்னணி அமைகிற வரையிலும், இடைப்பட்ட மாறிச் செல்லும் காலக்கட்டத்தில், அந்தத் திசையில் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் அனைத்தும் பரிசோதனைகளே. அது காலத்தின் தேவை, சூழல், சக்திகளின் நிலை என பலவற்றையும் உள்ளடக்கியதாக, அதற்கு ஏற்றாற்போல, இருக்கும்.

**கூட்டணிகள் நமது அணுகுமுறை**

பொதுவாக, தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதே நமது அடையாளம், நமக்கும் இதர இடதுசாரி கட்சிகளுக்கும் இடையிலான வேறுபாடு என சிலர் கருதுகின்றனர். அது சரி யல்ல. இதர வர்க்க சக்திகள், அவர்களின் பிரதிநிதியான அரசியல் சக்திகளோடு உறவாடுவது என்பதிலிருந்து நாம் தனித்து நிற்பது, விலகி நிற்பது என்பது நமது நீண்ட கால புரட்சிகர நோக்கான சக்திகளின் சமன்நிலையில் மாற்றம் கொண்டு வருவது என்பதற்கு எதிரானது ஆகும். இதர கட்சிகளுக்கும் நமக்கும் இருக்கும் வேறுபாடு என்பது புரட்சிகர அணுகுமுறைக்கும் சந்தர்ப் பவாத மற்றும் அராஜகவாத அணுகுமுறைக்கும் இடையிலான வேறுபாடு ஆகும். அதனை வெறுமனே கூட்டணி குறித்ததாக குறுக்கிவிடக் கூடாது.

அத்தகைய உறவாடல் வெற்றிகரமானதாக இருக்க வேண்டுமானால், நமது சொந்த பலம் வலுவானதாகவும் நமது அரசியல் நிலைப் பாடுகள் சுதந்தரமானதாகவும் அத்தகைய முன்னணிகளுக்கு தலைமை தாங்கும் அளவுக்கு வலுப்பெறுவதும் முன்நிபந்தனை ஆகும். முன்னணிகளின் வெற்றியும் நமது பலமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக இருப்பதால்,

ஒன்று முடிந்த பிறகே மற்றொன்று என இருக்க முடியாது. நாம் பலம் பெறுவதன் மூலம் முன்னணி அமைவதாகவும் இருக்கலாம், பெரும்பாலான சமயங்களில் அதுவே சாத்தியம். சில சமயங்களில், முன்னணியின் மூலமாக பலம் பெறுவதாகவும் இருக்கலாம். அது ஒவ்வொரு சூழலோடு தொடர்புடையதாக இருக்கும்.

சீனத்தில் கம்யூனிஸ்ட் கட்சி, ஜப்பானிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக, தேசிய முதலாளி யான சியாங்கேஷேக்குடன் அய்க்கிய முன்னணி அமைத்தது. தளப் பிரதேசங்கள், மக்கள் படை எல்லாம் கொண்டதாக கம்யூனிஸ்ட் கட்சி வலுவானதாக இருந்த போதும், இறுதி வெற்றிக்கு காலமும் தூரமும் இன்னமும் செல்ல வேண்டியிருந்ததால், பொது எதிரியான ஜப்பானிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக சியாங் கேஷேக்குடன் கூட்டணி அமைத்தது. ஒரு குறிப்பிட்ட கால கட்டத்திற்குப் பிறகு, சியாங் கேஷேக்கைத் தூக்கியெறிந்து விட்டு ஆட்சியை தானே கைப்பற்றியது.

## பகுதி 2
## பாசிசத்தின் இந்திய முகம்




பாசிசத்திற்கு எதிரான போராட்டம் முதன்மை யானதாக முன்வந்திருக்கிறது. இந்திய பாசிசம் என்பதை மேற்கத்திய பாசிச அளவுகோலிலிருந்து மட்டும் பார்க்க முடியாது. இந்திய பாசிசம் அதற்கே உரித்தான தன்னியல்புகளைக் கொண் டிருக்கிறது.

பாசிசத்திற்கு இரண்டு முக்கிய முகங்கள், அடிப்படைகள் இருக்கின்றன. பொருளாதார மட்டத்தில், நிதி மூலதனம், நிதி மூலதன ஏற்றுமதி என்பது அதன் ஒரு முக்கிய முகமாகும். கலாச்சார மட்டத்தில் ஒற்றைத்தன்மையை வலியுறுத்துவது, மாற்று கருத்துகளை விமர்சனங்களை ஒடுக்குவது, வெறுப்பை விதைப்பது, அந்த வெறுப்பின் அடிப்படையில் வளர்வது என்பன போன்றவை ஆகும். அதற்காக, நம் நாட்டு மக்களையே எதிரிகளாக வரித்துக் கொள்கிறது. இங்கே, முஸ்லீம்களும் அதற்குப் பிறகு கிறித்துவர்களும் எதிரிகளாக வரித்துக் கொள்ளப்பட்டு இருக்கிறார்கள். பின்னர், தலித்துக்கள், தொழிலாளர்கள், முற்போக்கு அறிவாளிகள் என அந்தப் பட்டியல் மிக நீண்டது. மற்றொரு முக்கிய அம்சம் அது பரந்த மக்கள் மத்தியில் நிலவும் பின்தங்கிய கருத்துக்களை, பிற்போக்கு கருத்துக்களை சார்ந்தே, அதனைத் தூபம் போட்டு வளர்த்தே மக்கள் செல்வாக்கு கொண்டதாக, பிரபல மானதாக ஆகிறது. பரந்த மக்கள் செல்வாக்கு (பிரபலத் தன்மை) என்பது மற்றுமொரு மிக முக்கிய அடிப்படை ஆகும்.

### சுயேச்சாதிகாரமும் பாசிசமும் ஒன்றல்ல

இந்திரா காந்தி ஆட்சியிலிருந்த போது இருந்த அவசர நிலை பிரகடன காலக் கட்டத்துக்கும் இன்றைய மோடி - ஆர்எஸ்எஸ் பாசிசத்துக்கும் பல ஒத்த தன்மைகள் இருக் கின்றன. ஆனால், இரண்டும் ஒன்றல்ல. இந்திரா காந்தியின் ஆட்சி யதேச்சாதிகாரம் என்றும் சுயேச்சாதிகாரம் என்றும் வர்ணிக்கப்பட்டது. அது அரச ஒடுக்குமுறையோடு, காவல் துறை, நிர்வாகத் துறை நடத்தும் ஒடுக்குமுறையோடு சம்பந்தப்பட்டது. ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பிறகு மக்கள் போராட்டங்கள் காரணமாக அவசர நிலை காலத்துக்கு முற்றுப் புள்ளி வைக்கப் பட்டது. செயல்படாமல் முடக்கப்பட்ட சட்டங்கள் மீண்டும் நடைமுறைக்கு வந்தன. ஆனால், பாசிசம் என்பது தற்காலிகமானது அல்ல. அது ஒரு புறம், அரசு நிர்வாகம் சார்ந்த ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுகிறது. நாட்டின் சட்டங்கள் செயல்படுவதை நிறுத்தி வைக்கிறது. இன்னொரு புறம், சட்டத்தின் துணையோடு ஏவ முடியாத ஒடுக்குமுறையை வெறுப்பு அரசியல் மூலமும் தனது குண்டர் படை மூலமும் செய்து முடிக்கிறது. வெறுப்பு அரசியலை மக்கள் மத்தியில் விதைத்து, அந்த வெறுப்பு அரசியலையே பொதுப் புத்தி என அழைத்து, அதன் மூலம் ஒரு பரந்த, அரச நிர்வாகம் சாராத, அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு அப்பாற்பட்ட ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுகிறது. இதற்காகவே, பஜ்ரங் தள், ஸ்ரீராம் சேனா, அபினவ் சேனா போன்ற பல அவதாரங்களை உருவாக்கி வளர்க்கிறது.

இந்த அமைப்புகள் வன்முறையை தூண்டு வதற்காகவே, வன்முறை செய்வதற்காகவே உருவாக்கப்பட்டுள்ளன. அதற்கான பயிற்சியும் அளிக்கப்படுவது எல்லோருக்கும் தெரிந்ததே. இது பாசிசத்தின் மிகக் குறிப்பானதோர் குணாம்சம் ஆகும். இதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

### பாசிச எதிர்ப்புப் போராட்டம்

இந்தக் குறிப்பான பின்னணியில், பாசிச எதிர்ப்புப் போராட்டம் தலையாயதாக மாறு கிறது. பாசிசத்தை எதிர்கொள்ளும் விதத்தில் நமது செயல்தந்திரத்தை வடிவமைக்கக் கோருகிறது. ஆகவே தான், பாசிச எதிர்ப்புப் போராட்டத்தை வலுப்படுத்தும் விதத்தில், அனைத்து, பல தரப்பட்ட, பாசிச எதிர்ப்பு சக்திகளோடும், நமது விருப்பு வெறுப்பு, மதிப்பீடு, விமர்சனங்களோடு கூடவே இணைந்து செயல்பட வேண்டிய ஒரு அரசியல் அவசியம் ஏற்படுகிறது. இதை அறிந்துதான், பிஜேபி அதன் கூட்டாளிகள் அல்லாத அனைத்து சக்திகளோடும் முழுமை யாகவோ, அரைகுறையாகவோ, போராட்ட அணியிலோ தேர்தல் அணியிலோ இணைந்து செயல்பட நாம் தயாராக வேண்டும் என 10வது அகில இந்திய மாநாடு அறைகூவல் விடுத்தது.

அப்படிப்பட்ட அணிசேர்க்கைகள் உருவாவ தால், நமது அடிப்படைக் கொள்கைகளில் சமரசம் செய்ய வேண்டும் என்கிற அவசியம் இல்லை. எந்தவொரு சூழலிலும் கம்யூனிஸ்ட் கட்சி தனது அரசியல் சுதந்தரத்தை உயர்த்திப் பிடிக்கிறது. எந்தவொரு அரசியல் கட்சி / சக்தி குறித்தும் தீண்டத்தகாத கொள்கை என்பது அரசியல் புத்திசாலித் தனம் இல்லாததாகும். மாறாக, எந்தவொரு அரசியல் கூட்டணியிலும் நமது அரசியல் சுதந்தரத்தை உயர்த்திப் பிடிப்பது என்பது தான், சந்தர்ப்பவாதத்துக்கு எதிராக புரட்சிகர நிலைப்பாட்டை உயர்த்திப் பிடிப்பது என்பதுதான் சரியான கம்யூனிஸ்ட் செயல் தந்திரம் ஆகும்.

### பீகார் அனுபவம்

மேற்கண்ட தகவு நோக்கிலிருந்துதான் 2020ல் பீகார் சட்டமன்றத் தேர்தலில் நாம் ஆர்ஜேடி கட்சியுடன் கூட்டணி வைத்து, பாசிசத்திற்கு எதிரான தேர்தல் போராட்டத்தைக் கூர்மைப் படுத்த முயற்சி செய்தோம். நம்மைத் தவிர, இதர இடதுசாரிகள் உட்பட, அனைத்து எதிர்க் கட்சிகளும் கூட்டணி அமைத்து விட்டன. நமது சுதந்தரத்தை விட்டுக்கொடுத்து ஆர்ஜேடியுடன் கூட்டணிக்கு வாய்ப்பில்லை என்று நாம் வேட்பாளர்களை அறிவித்து விட்டோம். அதற்குப் பிறகுதான் ஆர்ஜேடி நமது முன்வைப்புகளை ஒப்புக் கொண்டது. காரணம் பீகாரில் இகக(மாலெ) கட்சி என்பது ஒரு ஒடுக்கப்பட்ட மக்களின் கட்சி. அவர்களின் விருப்பங்களை பிரதிபலிக்கும் ஒரு போராட்ட இயக்கம். இகக(மாலெ) அல்லாத ஒரு எதிர்க் கட்சிக் கூட்டணி என்பது பீகாரின் குறிப்பிட்ட சூழலில் பாசிச எதிர்ப்பு போராட்டத்தின் முனை மழுங்கடிக்கப்பட்டதாக ஆகிவிடும். அதனால் தான் நாம் கூட்டணியில் இடம் பெற்றோம், 12 தொகுதிகளில் வெற்றியும் பெற்றோம். இன்றைய சூழலில், இடதுசாரிகள் ஆளும் கேரளா, ஆண்ட திரிபுராவை கழித்து விட்டால், ஒரே மாநிலத்தில் 12 சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட ஒரே இடதுசாரி கட்சி நாம் மட்டும்தான். கூட்ட ணியின் காரணமாகத்தான் வென்றோம் என நினைத்தால் அது முழுமையானதாக இருக்காது. கூட்டணியின் மூலம் ஆர்ஜேடிக்கும் கூட்டணி கட்சிகளுக்கும் லாபம். நமக்கும் லாபம். எந்த கூட்டணியும் இல்லாமலே சுதந்தரமாக தனித்துப் போட்டியிட்டு 8 தொகுதிகள் வரையிலும் கூட நாம் வென்றிருக்கிறோம். பரஸ்பரம் அரசியல் ஆதாயம் இல்லாமல் எந்த கூட்டணியும் கிடையாது. அதே போல, பொதுவான அரசியல் கடமையை துறந்து விட்டு எந்தக் கூட்டணியும் இருக்க முடியாது. கூட்டணி என்பதே பாசிச எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் அரசியல் கடமையை நிறைவேற்றத் தானே தவிர, கூட்டணிக்காக கூட்டணி என்பதாக இருக்க முடியாது.

### மேற்கு வங்க அனுபவம்

பீகாரில் சிபிஐ(எம்எல்), சிபிஐ(எம்), சிபிஐ இணைந்து ஆர்ஜேடி-காங்கிரசோடு சேர்ந்து தேர்தலில் போட்டியிட்டோம். அதே போன்ற ஒரு அணி அடுத்து நடைபெற்ற மேற்கு வங்க தேர்தலிலும் உருவாகும் என அரசியல் நோக்கர்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால், அங்கு அது சாத்தியம் இல்லாமல் போய் விட்டது. ஏனென்றால், சிபிஐ, சிபிஐ(எம்) கட்சிகள் தேர்தலில் பிஜேபியையும் திரிணாமூலையும் சமமாக எதிர்ப்பதாக கூறினார்கள். அத்தகைய ஒரு நிலைப்பாடு பிஜேபிக்கு ஆதரவாக போய் விடும் என நாம் எச்சரித்தோம். ஆனால், நம்மால் அவர்களை இணங்க வைக்க முடியவில்லை. பீகாரில் தேர்தல் சமயத்தில் நடத்திய பாசிச எதிர்ப்புப் போரை மேற்கு வங்கத்தில் தொடர வேண்டுமானால், பிஜேபியை தோற்கடிப்பதே

மையமான கடமையாக இருக்கும் என முடிவெடுத்தோம். "பிஜேபியை தோற்கடியுங்கள்" என்று மேற்கு வங்க மக்களுக்கு அறைகூவல் விடுத்தோம். திரிணாமூல் காங்கிரஸ், தமது அணியில் நம்மை சேர்த்துக் கொள்ள விழைந்து, நமக்கு தூது அனுப்பினார்கள். அதை ஏற்றுக் கொண்டிருந்தால் மேற்கு வங்கத்திலும் கூட நாம் சில தொகுதிகளில் வெற்றியடைந்து சில சட்டமன்ற உறுப்பினர்களைப் பெற்றிருக்கலாம். அது உறுதிதான். ஆனால், நாம் ஓட்டுக்காகவும் சீட்டுக்காகவும் அலையாதவர்கள் என்பதால், பாசிச எதிர்ப்புப் போராட்டம் எனும் அரசியல் கடமையை உயர்த்திப் பிடிப்பவர்கள் என்பதால், என்ன விலை கொடுத்தேனும் பாசிச எதிர்ப்பு அரசியல் கடமையை நிறைவேற்றுபவர்கள், சமரசம் செய்யாதவர்கள் என்பதால், கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் சுதந்தரத்தை எக்காரணம் கொண்டும் காவு கொடுக்காதவர்கள் என்பதால், அதை நிராகரித்தோம்.

**கூட்டணி செயல் தந்திரம்**

அது மட்டுமல்ல. பீகாரில் லாலு முதல்வராக இருந்தபோது நமது கட்சியோடு கூட்டணி வைத்துக் கொள்ள நமது கட்சியின் பீகார் மாநில அலுவலகத்துக்கே வந்து பேசினார். நாம் நிராகரித்தோம். ஆட்சியில் இருக்கும் கட்சியை யும் எதிர்க்கட்சியையும் வேறுபடுத்திப் பார்க்க வேண்டும். இடதுசாரிகள் ஆளும் மாநிலங்களில் கூட, குறிப்பிட்ட சில நடவடிக்கைகளை ஆதரிக்கும் அதே சமயம், அடிப்படையில் நாம் எதிர்க் கட்சியாகவே செயல்படுகிறோம்.

காங்கிரஸ் கட்சி இப்போது ஒன்றியத்தில் ஆட்சியில் இல்லை. சிதைந்து கொண்டிருக்கிறது. தனது மக்கள் செல்வாக்கை, அடித்தளத்தை இழந்து கொண்டிருக்கிறது. திக்கு தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறது. இந்தப் பின்னணி யிலும், பாசிச சக்திகளின் வளர்ச்சி பின்னணி யிலும் நாம் நமது அணுகுமுறையை பரிசீலிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது.

**ஆம் ஆத்மியின் அவதாரங்கள்**

ஆம் ஆத்மி கட்சி இருக்கிறது. அது பஞ்சாபில் ஆட்சிக்கு வந்திருக்கிறது. ஓராண்டு கால விவசாயிகள் போராட்டத்துக்கு ஆம் ஆத்மி கட்சி பெரிதாக ஏதும் செய்திடவில்லை. ஆனால், அதன் முழுமையான அறுவடையை மட்டும் பெற்றுவிட்டது. விவசாயிகள் சங்கங்கள் எல்லாம் சேர்ந்து புதிதாக உருவாக்கிய கட்சி, குறிப்பி டத்தக்க வாக்குகளையும் கூட பெற முடிய வில்லை. அங்கு அம்பேத்கரையும் பகத் சிங்கை யும் திறமையாக பயன்படுத்திக் கொண்டதாலும் மக்கள் மத்தியில் பிரபலமான ஒருவரை முதல் அமைச்சராக முன்நிறுத்தியதாலும் வெற்றி சாத்தியமாகி இருக்கிறது. அதை விட முக்கியமாக, பஞ்சாப் மக்கள் மத்தியில் பேரலை யாக எழுந்த அரசியல் மாற்றத்திற்கான வேட்கையின் காரணமாக வெற்றி பெற்றிருக் கிறார்கள். அதனால் தான் அகாலி தளம் போன்ற பாரம்பரிய பஞ்சாப் கட்சிகள், தாமதமாக வேனும், தம்மை மாற்றிக் கொள்வதற்காக, பிஜேபியோடு உறவைத் துண்டிப்பது, அமைச்சர் பதவியை ராஜினாமா செய்வது என பல முயற்சிகள் எடுத்தாலும் மாற்றாக உதிக்க முடியவில்லை. பிஜேபியின் முயற்சியும் பலிக்கவில்லை. காங்கிரஸ் தலித் முதல்வரை முன்நிறுத்தியும் வெல்ல முடியவில்லை.

கர்நாடகத்தில் பிரபலமான விவசாயிகள் சங்கத் தலைவரான கோடிஹள்ளி சந்திர சேகருடன் இணைந்து கட்சியை பலப்படுத்த ஆம் ஆத்மி முயற்சிக்கிறது. சமீபத்தில், எல்லோரின் கவனத்தையும் ஈர்க்கிற விதத்தில் ஒரு பெரிய நிகழ்ச்சியையும் கூட கட்டமைத்தது. ஆனால், அதன் முக்கிய இலக்கு பிஜேபி அல்ல, காங்கிரஸ்தான் என பலரும் கூறுகின்றனர். ஆம் ஆத்மியும் கூட மதச் சார்பின்மைக்கு வேறு ஒரு விளக்கம் கொடுக்கிறது. அரசுக்கும் மதத்திற்கும் சம்பந்தம் இருக்க கூடாது என்பதல்ல, "எம்மதமும் சம்மதம்" என்கிறது. அந்த அடிப்படையில், டெல்லி மாநில ஆம் ஆத்மி அரசாங்கம், இந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்த வர்கள் என ஒவ்வொரு மதத்தவரும் ஒரு புனித யாத்திரை சென்றுவர, மக்களை மதரீதியாக திரட்டியது எல்லோருக்கும் தெரியும். நாடு தழுவிய ஊழல் எதிர்ப்புப் போராட்டத்தின் மூலம் உதித்த ஆம் ஆத்மி கட்சி, இப்போது கேஜிரிவால் மாடல் அரசாங்கம் என சொல்லிக் கொண்டு, காங்கிரசின் இடத்தைப் பிடித்திட முயல்கிறது, அதனை அரசியலில் இருந்து அகற்றும் பணியை முன்னெடுக்கிறது என சொல்லப்படுகிறது. இந்த கட்சி காலப்போக்கில் எப்படி உருப்பெறப் போகிறது, என்ன அரசியல் அவதாரம் எடுக்கப் போகிறது என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டிய ஒரு அம்சமாக இருக்கும்.

**பாசிச எதிர்ப்பின் முகங்கள்**

பாசிச வளர்ச்சி என்பது மூர்க்கத்தனமாகவும் தீவிரமாகவும் நடந்து வருவதால் நாம் நம் செயல்தந்திரத்தில் பல மாற்றங்கள் செய்ய

வேண்டி நேர்ந்தது. தோழர் டிமிட்ரோவ் உள்ளிட்ட மார்க்சீய ஆசான்களும் கம்யூனிஸ்ட் அகிலமும் அய்க்கிய முன்னணி குறித்து முன்வைத்த பல ஆய்வுரைகளும் வழிகாட்டுதல்களும் நமக்கு வழிகாட்டியாக இருக்கின்றன. அந்தப் பின்னணியில், தேர்தல் உடன்பாடுகள், கூட்டணி உட்பட, பல விசயங்களை நாம் மாற்றியமைத்திருக்கிறோம்.

**இந்து ராஜ்யத்திற்கு, மனு ஸ்மிருதிக்கு எதிராக...**

நமது இறுதி லட்சியம் என்பது முதலாளித்துவ சட்டங்களைத் தூக்கி எறிந்து விட்டு, உழைக்கும் வர்க்க ஆட்சியை நிறுவக் கூடிய முற்றிலும் புதிய சட்டங்களை உருவாக்குவது என்பதாகும். ஆனால், பாசிச எதிர்ப்புப் பின்னணியில், நாம் இன்றைய முதலாளித்துவ ஜனநாயக சட்டங்களையும் கூட பாதுகாக்கிற கடமையை நிறைவேற்ற வேண்டியவர்களாகி இருக்கிறோம். அதுவும் குறிப்பாக, ஆர்எஸ்எஸ்-மோடி தலைமையிலான பாசிச ஆட்சியாளர்கள், அம்பேத்கர் உருவாக்கிய அரசியல் அமைப்புச் சட்டத்தை தூக்கி எறிந்துவிட்டு, மனு ஸ்மிருதியை அரசியல் அமைப்பு சட்டமாக கொண்ட "இந்து ராஜ்யம்" அமைத்திட மூர்க்கத்தனமாக முயற்சித்திடும் போது, அம்பேத்கர் உருவாக்கிய சட்டத்தை பாதுகாக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். பாசிச சக்திகள் கொலைகார கோட்சேக்களை தெய்வமாக புகழும்போது, அவனுக்கு கோவில்கள் கட்டும் போது, கோட்சேவால் கொல்லப்பட்ட காந்தியை நாம் நினைவுகூர வேண்டியவர்களாகி இருக்கிறோம்.

எனவே, செயல்தந்திரம் என்பது மிகவும் துடிப்பானது, மீண்டும் மீண்டும் மாறக் கூடியது, சூழ்நிலைக்குத் தக்க அவதாரம் எடுப்பது, முதன்மை அரசியல் கடமையை நிறைவேற்றுவதை நோக்கமாக கொண்டது, அத்தகைய அரசியல் கடமையை நிறைவேற்றுவதற்காக எந்த மாற்றத்தையும் செய்யத் தயாராக இருப்பது என்பதாக நாம் புரிந்து கொண்டாக வேண்டும். என்றும் மாறாமல், ஒரே நிலைப்பாட்டை மேற்கொள்வோமேயானால், நாம் இயங்கியல் அறிவியலுக்கு எதிரானவர்களாக, இயக்க மறுப்பியல்வாதிகளாகி விடுவோம் என்பதை மறந்துவிடக் கூடாது.

( தொடரும்... )

# இலங்கையின் கோடை எழுச்சியும் இந்தியாவுக்கான பாடமும்

ராஜபக்சேவின் ஆட்சிக்கும் அதனுடைய மோசமான ஆட்சிமுறைக்கும் எதிராக 2022 மார்ச்சில் இருந்து இலங்கை மக்கள் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். அந்த அரசின் தவறான பொருளாதார நிர்வாகத்தின் காரணமாக உணவு மற்றும் எண்ணை விலைகள் கடுமையாக உயர்ந்தன. எண்ணை தட்டுப்பாடு, முடிவில்லாத மின்சாரத் தட்டுபாடு, எண்ணை வாங்க வரிசையில் நின்று வயதானவர்கள் இறப்பு எல்லாம் மக்கள் போராட்டத்தைப் பற்றி எரியச் செய்தது.

அதிபராகவும் பிரதம மந்திரியாகவும் முறையே கோத்தபயவும் மகிந்தவும் இருந்து கொண்டு அந்த சிறிய தீவு நாட்டை தற்போது ஆண்டு கொண்டிருக்கும் ராஜபக்சே சகோதரர்கள் பதவி விலக வேண்டும் என்கிற குரலாக வெகுவிரைவாக அந்தப் போராட்டங்கள் முன்னெழுந்து வந்தன. அரசாங்கத்தின் வெளிப்படையான குடும்ப ஆட்சிமுறையும் மக்களின் கோபத்தை அதிகரித்தது. இதை எழுதிக் கொண்டிருக்கும் வேளையில், சுய நிர்ணய உரிமைக்காகப் போராடிய தமிழ் மக்களை கொன்றொழித்த மகிந்த ராஜபக்சே பதவி விலக வேண்டிய நிலை ஏற்பட்டது. அதே வேளை அவரது சகோதரரும் அதிபருமான கோத்தபய போராட்டத்தை ஒடுக்க போராட்டக் காரர்களைக் கண்டால் சுட்டுத்தள்ள உத்தர விட்டுள்ளார்.

தமிழ்ப் போராளிகளை வென்ற 'பலமான தலைவர்கள்' என்கிற அடையாளத்தைக் கொண்டுதான் ராஜபக்சே சகோதரர்கள் ஆட்சிக்கு வந்தார்கள். தமிழர்கள் மீதான இன வெறுப்பு, 'இஸ்லாமிய அச்ச' அரசியலாக (ஹலாலுக்கும் ஹிஜாப்பிற்கும் தடைகள் என இந்தியாவில் தற்போது பாஜக-ஆர்எஸ்எஸ் செய்து வருவது போல்) வெறுப்புணர்ச்சியை விசிறி விட்ட புத்தபிச்சுக்களுக்கு ஆதரவு என சிறுபான்மை இஸ்லாமியர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. இன மற்றும் மத பிரிவினைகளைக் கடந்து எழுந்து வந்துள்ள ஒன்றுபட்ட இலங்கை மக்களின் இந்தப் போராட்டம் இந்தியர்களுக்கு மிகவும்

முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இன வெறுப்பு அரசியல்கள் மூலம் அரியணை ஏறிய ராஜபக்சே ஆட்சியின் அவலங்களை இலங்கை மக்கள் இப்போது காண்கிறார்கள்.

இந்தியாவில் மோடி உருவாக்கிய அவல ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. விண்ணை முட்டும் விலைவாசி உயர்வு, கடந்த ஐம்பது ஆண்டுகளில் இல்லாத வேலையில்லாத் திண்டாட்டம், அதோடு கூடவே மோடி மற்றும் பாஜக ஆளும் மாநிலங்களில் தொடரும் வெறுப்புப் பேச்சு, வெறுப்பு அரசியல் கொள்கைகள் எல்லாம் இலங்கை நிலைமையை நினைவூட்டுகிறது. உத்தரப்பிரதேசத்திலும் பீகாரிலும் சுற்றிச் சுழலும் விவசாயிகள் போராட்டங்கள், வேலையில்லா இளைஞர்கள் போராட்டங்கள், பாஜகவின் இஸ்லாமியர் எதிர்ப்பு, கிறிஸ்தவர் எதிர்ப்பு வன்முறைகள் மூலம் மட்டுமே கட்டுப்படுத்த முடியாது என்பதற்கான அடையாளங்கள் ஆகும்.

இந்தியாவில் சங் கும்பல்கள் சிறுபான்மை இஸ்லாமியர்கள் இன அழிப்பு செய்ய வேண்டும் என வெறுப்பை விதைக்கிறார்கள். இஸ்லாமியர் களும் கிறிஸ்தவர்களும் இந்து மதவெறி அரசால் நடத்தப்படும் வன்முறையை தினமும் எதிர் கொள்கிறார்கள். இலங்கையின் உள் நாட்டு போரானது தமிழர்களை இன அழிப்பு செய்ததில் போய் முடிந்ததை இலங்கை கண்டது. இலங்கை ஆட்சியாளர்கள் இந்த இன அழிப்பின் மூலம் மனித நேயத்திற்கு எதிரான தங்கள் குற்றங்களில் இருந்து தப்பித்தது மட்டு மின்றி புகழையும் அரசியல் அதிகாரத்தையும் கைப்பற்ற அதையே மூலதனமாக்கிக் கொண்ட னர். மேலும் சிறுபான்மையினருக்கான புதிய வெறுப்பு அலைகளைத் தூண்டிவிட்டார்கள். இதனால் இலங்கையின் இஸ்லாமியர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள், சிறுபான்மை மக்கள் ஒருவருக்கொருவர் எதிராக குழி பறித்துக் கொண்டார்கள். தமிழ் பிரிவினைவாதத்திற்கு எதிரான போர் என்ற கூச்சலும் சிங்கள இனவெறி தேசியவாதமும் தற்போது செயலிழந்து போய், ஒடுக்கப்பட்டவர்களின் தோல்வியானது தவிர்க்க முடியாமல் அனைவருக்குமான தோல்வியின் எழுச்சியாக வெளிவந்துள்ளது. இது இலங்கை மக்களிடமிருந்து இந்தியர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய மற்றொரு பாடம் ஆகும்.

கடுமையான அடக்குமுறையைச் சந்தித்தும் தீவிரமான உறுதிப்பாடுடன் உள்ள இலங்கை மக்களின் இந்த எழுச்சியானது இந்திய மக்களுக்கு உத்வேகம் அளித்துக் கொண்டிருக் கிறது. இலங்கை மக்கள் போராட்டம் வெல்லட் டும்! வெறுப்பு அரசியல், நவ தாராளவாதக் கொள்ளைகளை நிராகரிக்கவும் மக்கள் உரிமைகளை அறுதியிடவும் இந்தியா மற்றும் தெற்காசிய மக்களுக்கு உத்வேகமளிக்கும் எடுத்துக்காட்டாக விளங்கட்டும்!

**எம்எல் அப்டேட்– தலையங்கம்**
**10–16 மே 2022**

**தமிழாக்கம் – சங்கரந்தம்பி**

# திராவிட மாதிரி 'சமூகநீதி', 'சமத்துவ அரசு'டன் கைகுலுக்கிய "ஆன்மீக அரசு"!

பெரியாரைக் கொண்டாடும் 'சமூகநீதி அரசு', அம்பேத்கரை போற்றும் 'சமத்துவ அரசு', ஆதீனங்கள், பிற்போக்கு சக்திகளின் அழுத்தத்துக்கு பணிந்து "ஆன்மீக அரசாகி"ப் போனது அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது! "கலாச்சாரம், பாரம்பரியம்" என்ற பேரால் தமிழ்நாட்டின் 'மானுட உரிமை', 'பகுத்தறிவு' 'முற் போக்கு' மரபுக்கு திமுக அரசு பின்னடைவை ஏற்படுத்தியிருக்கிறது. பாஜகவை பின்னுக்கு தள்ளுவது எனும் பேரால் திமுக அரசின் இந்த தற்காப்பு அணுகுமுறை பாஜக போன்ற வலதுசாரி சக்திகளுக்கு மேலும் துணிச்சல் அளிப்பதிலேயே போய் முடியுமென இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்– லெனினிஸ்ட்) எச்சரிக்கிறது.

பழைய ஓய்வூதிய திட்டத்தை செயல்படுத்த வேண்டு மென்ற உழைக்கும் வர்க்கத்தின் குரலுக்கும் சென்னையில் "ஆக்கிரமிப்பு" என்ற பேரால் ஏழை மக்களின் வீடுகளை இடிக்க கூடாது என்ற குரலுக்கும் செவிசாய்ப்பதைக் காட்டிலும் ஆதினங்களின் குரலுக்கு அரசு பணிந்திருப்பது திமுக அரசின் ஓராண்டு சாதனையாக மாறிவிடுவது கவலை அளிப்பதாகவே உள்ளது. பாஜகவை தமிழ்நாட்டில் தலை யெடுக்க விடாமல் செய்ய, அதை நேருக்கு நேர் எதிர்கொள்வதுதான் ஒரே பாதை என மாலெ கட்சி வலியுறுத்திக் கூறுகிறது. சாமான்ய மக்களின் ஆன்மீக நம்பிக்கையை வலதுசாரி சக்திகள் 'பல்லக்காக' பயன்படுத்திக் கொள்ள அரசு ஒருபோதும் இடமளித்துவிடக் கூடா தென்றும் வலியுறுத்துகிறது. தமிழ்நாட்டிலுள்ள முற்போக்கு, மானுட உரிமை, பெரியாரிய, அம்பேத்கரிய, இடதுசாரி சக்திகள், தமிழ்நாட்டில் தலையெடுக்கத் துடிக்கும் வலதுசாரி சக்திகளுக்கு எதிராகவும் அந்த சக்திகளின் அழுத்தத்திற்கு பணியும் அரசின் செயல்களுக்கு எதிராகவும் விழிப்புடன் இருந்து தொடர்ந்து குரலெழுப்ப முன்வர வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறது.

**என்.கே நடராசன்,மாநிலச் செயலாளர், இகக(மாலெ)**

**பெட்ரோல் டீசல் சமையல் எரிவாயு விலை உயர்வு!**
**வேலையின்மை வெறுப்பு அரசியல்!**
**மோடி அரசின் மக்கள் விரோதப் போக்கைக் கண்டித்து**

# மே 25 முதல் மே 31 வரையில் தேசம் தழுவிய பிரச்சாரம்!

## மே 26, 27 தமிழகமெங்கும் கண்டன ஆர்ப்பாட்டம்!

*அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தின் விலையும் கட்டுக்கடங்காமல் உயர்ந்து கொண்டிருக்கிறது. இதனால் ஏற்கனவே வறுமையில் உள்ள மக்கள் பட்டினிக் கொடுமைக்கு ஆளாகியுள்ளார்கள். முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு வேலையின்மை அதிகரித்துள்ளது. ஆனால் மோடி அரசாங்கமோ எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றி வருகிறது.*

*கடந்த ஓராண்டில் மட்டும் பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விலைகள் 70 சதவீதம் உயர்ந்துள்ளன. காய்கறி, தானியங்கள், உணவு எண்ணெய் விலை என அனைத்துமே அதிகரித்துள்ளது. நிலக்கரி பற்றாக்குறைக்கு வழிவகுத்த அரசின் கொள்கைகளால் இப்போது மின்சார உற்பத்தியும் பாதித்துள்ளது.*

*மோடி அரசின் நாசகர கொள்கைகளுக்கு எதிராகவும் பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விலை உயர்வை கட்டுப்படுத்திடவும் மே 25 முதல் மே 31 வரை தேசம் தழுவிய அளவில் இயக்கம் நடத்திட வேண்டுமென இடதுசாரி கட்சிகள் விடுத்துள்ள அறைகூவலின் அடிப்படையில் கீழ்க்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி சிபிஐ(எம்), சிபிஐ, சிபிஐ(எம்எல்), விசிக ஆகிய கட்சிகளின் சார்பில் கண்டன இயக்கம் நடத்திட முடிவு செய்யப்பட்டுள்ளது.*

- *பெட்ரோல் டீசல் சமையல் எரிவாயு பொருட்கள் மீதான வரிகளை கைவிட்டு, விலை உயர்வுகளை மொத்தமாக திரும்பப் பெற்றிடு!*
- *பருப்பு, எண்ணெய் உள்ளிட்ட அனைத்து அத்தியாவசியப் பொருட்களையும் நியாய விலை கடைகளில் வழங்கிடு!*
- *வருமான வரி வரம்பை எட்டாத அனைத்து குடும்பங்களுக்கும் மாதம் ரூ.7500 வழங்கிடு!*
- *ஊரக வேலை உறுதி திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டை உயர்த்து!*
- *வேலை வாய்ப்பை பெருக்கிடுக!*
- *நகரப்புற வேலை உறுதி சட்டம் கொண்டு வருக!*
- *வேலையில்லா கால நிவாரணம் அளிப்பதற்கான மத்திய சட்டத்தை நிறைவேற்றுக!*
- *அரசுத்துறையில் காலி பணியிடங்களை முழுமையாக நிரப்பிடுக!*

*இதுதொடர்பாக 17.05.2022 அன்று நடைபெற்ற கூட்டத்தில், தமிழகத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி(மார்க்சிஸ்ட்), இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்)லிபரேசன், விடுதலை சிறுத்தைகள் கட்சி ஆகிய கட்சிகளின் சார்பில் 2022 மே 26 - 27 ஆகிய தேதிகளில் ஒன்றிய, நகர, வட்ட தலைநகரங்களில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்துவது எனவும் 2022 மே 25-31 ஆகிய தேதிகளில் வீடு, வீடாக துண்டுப் பிரசுரம் விநியோகித்து பிரச்சாரம் மேற்கொள்வது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.*

*இவ்வியக்கத்தை வெற்றிகரமாக நடத்திட வேண்டுமென கட்சி அணிகளை கேட்டுக் கொள்வதோடு, பொதுமக்களும் பேராதரவு தெரிவிக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கிறோம்.*

**கே.பாலகிருஷ்ணன், மாநிலச் செயலாளர், சிபிஐ(எம்)**
**இரா.முத்தரசன், மாநிலச் செயலாளர், சிபிஐ**
**என்.கே.நடராஜன், மாநிலச் செயலாளர் சிபிஐ (எம்.எல்-லிபரேசன்)**
**தொல்.திருமாவளவன், தலைவர் விசிக**

MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted on 20.5.2022 at Egmore RMS/1 Patrika Channel Regn No:TN/CCN/368/2021-2023
Published on 1st and 16th of every month R.DIS: 2804/17 Licensed to Post WPP TN/PMG/(CCR)/WPP-436/2021-2023

# இகக(மாலெ) மாநில பயிற்சி முகாம்

# கொடைக்கானல்












Owned and Published bys; S.Balasundaram from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by R.Murugan at Print Point, 10, Pulipone Bazar 2nd Lane, Triplicane, Chennai - 600005. Editor G.Ramesh